பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை09 திங்கட்கிழமை (24.11.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:360

# கிழக்கு மாகாண சபைக்கு அதிகாரம் எதுவுமே இல்லை என்கிறார் பிள்ளையான்!

## 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுலாக்கவும் அனுமதி கிடையாது!!

கொழும்பு, நவம்பர் 24

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டு அது செயற்படத் தொடங்கியுள்ள போதிலும் அந்த மாகாணசபைக்கு சிறிதளவேனும் அதிகாரம் வழங்கப்படவில்லை என்றும், 13ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரம்கூடத் தமக்குக் கிடை யாது என்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) விசனத்துடன் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)



## சோக கீதம் இசைத்து ஈழத்தமிழருக்கு ஆதரவு

கொழும்பு, நவ. 24

புதுச்சேரியைச் சேர்ந்த பல்வேறு கலைஞர்கள் இணைந்து சோக கீதம் வாசித்து இலங்கைத் தமிழர்களுக்கு நூதன முறையில் ஆதரவு தெரிவித்தனர். புதுச்சேரியைச் சேர்ந்த இசைக்கலைஞர்கள் பலர் இணைந்து, இலங்கைத் தமிழர்களுக்கு நூதன முறையில் ஆதரவு தெரிவிக்க முடிவுசெய்தனர். இதையடுத்து அவர்கள்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிட கூட்டணி அமைக்கத் தயாராகிறது ஐ.தே.க.!

கொழும்பு, நவ. 24

எதிர்வரும் மாகாண ச... த் தேர்தலில் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டும் ... கில் பல கட்சிகளை ஒன்றிணைத்து பாரிய கூட... ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அத...கான பேச்சுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்றும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

நடத்தப்படப்போகும் தேர்தல் மாகாணசபைத் தேர்தலாக இருந்தாலும் சரி, பொதுத் தேர்தலாக இருந்தாலும் சரி, அத்தேர்தலை அதிக பலத்துடன் எதிர்கொள்ளத் தயாராகி வருவதாகவும் அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் மாவீரர் தினத்தை முன்னிட்டு கொழும்பிலும் பிற இடங்களிலும் பாதுகாப்புத் தீவிரம்

கொழும்பு, நவ. 24

விடுதலைப் புலிகளின் வருடாந்த மாவீரர் தினம் எதிர்வரும் வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்படுவதை ஒட்டி தலைநகர் கொழும்பிலும் பிற இடங்களிலும் பாதுகாப்புத் தரப்பினர் தமது கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியிருக்கின்றனர் என்று அறியப்படுகிறது.

மாவீரர் தினத்தை ஒட்டி, பழி வாங்கும் நடவடிக்கையாகப் புலிகள் தமது தாக்குதல் செயற்பாடுகளைத் தீவிரப்படுத்தக்கூடும் என்று கருதியே

(14 ஆம் பக்கம் பார்க்க)

# பரந்தனைக் கைப்பற்ற இராணுவம் பிரயத்தனம்; நல்லூரில் வழிமறித்து புலிகள் கடும் தாக்குதல்

## 43 படையினர் பலி என்று அறிவிப்பு

கொழும்பு, நவ. 24

பூநகரி - பரந்தன் வீதி வழியாக பரந்தனைப் பிடிக்க நேற்று கடும் மழைக்கும் மத்தியிலும் முன்னேற முயன்ற படையினரை, விடுதலைப் புலிகள் நல்லூர்ப்பகுதியில் வழி மறித்து நடத்திய எதிர்த் தாக்குதலில் 43 இராணுவத்தினர் உயிரிழந்தனர். 70இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் காயமடைந்தனர் என விடுதலைப் புலிகள் அறிவித்தனர் என நேற்றிரவு இணையத்தளங்கள் தகவல் வெளியிட்டன. இம் மோதல் சம்பந்தமாக வெளியான இணையத்தளத் தகவல்கள் வருமாறு:-

நேற்று அதிகாலை 4 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை இந்த மோதல் நீடித்தது என்றும் களமுனைத் தகவல்கள் தெரிவித்திருக்கின்றன.

கொட்டும் மழைக்கும் மத்தியிலும் இராணுவத்தினர், பெருமெடுப்பில் முன்நகர்வை மேற்கொண்டனர் என்றும், இந்த நகர்வை எதிர்கொண்ட புலிகள் அணி, கடும் எதிர்த் தாக்குதலை நடத்தி இராணுவத்தினரை பூநகரியை நோக்கி பழைய நிலைகளுக்குப் பின்வாங்கச் செய்தனர் எனவும் விடுதலைப் புலிகள் தரப்புச் செய்திகள் கூறுகின்றன.

(14 ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சியை நோக்கிப் படைகள் மும்முனைகளில் முன்னேற்றம்

## படைத்தரப்பு அறிவிப்பு

கிளிநொச்சி, நவ. 24

கிளிநொச்சி நகரை நோக்கி அடம்பனுக்கு வடக்கு, தெற்காக இரு அணிகளும் திருமுறிகண்டியிலிருந்து ஓர் அணியுமாக மும்முனைகளின் ஊடாக அரச படைகள் நேற்று அதிகாலை முன்நகர்வை மேற் கொண்டன.

நேற்று அதிகாலை 17 கமுனு வோச், 12 - கயபாகு றெஜிமன்ட், 8 - சிங்க றெஜிமண்ட் ஆகிய படைப்பிரிவுகள் விடுதலைப் புலிகளின் மண் அணைகளைக் கைப்பற்றின என்றும், அந்த மண் அணைகள் படையினரால் தற்போது பலப்படுத் தப்பட்டு வருகின்றன என்றும் இம்மோத லினால் விடுதலைப் புலிகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டது என்றும் படைத்தரப் பில் கூறப்பட்டது.

இதேவேளை, கொக்காவில் வடக்குப் பகுதியில் இருந்து ஏ- 9 வீதியை நோக்கிப்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் சனியன்று 14 தமிழர்கள் கைது.

கொழும்பு, நவ. 24

கொழும்பில்,ராஜகிரியவில் உள்ள, ஒபயசேகர பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து நேற்றுமுன்தினம் அதிகாலை 3 மணியளவில் மேற்கொண்ட சுற்றிவளைப் புத் தேடுதலின் போது 14 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சுற்றிவளைப்புத் தேடுதலின்போது கிழக்கு மாகாணம், வடக்கு மாகாணம்,

(14 ஆம் பக்கம் பார்க்க)

## லண்டன் மாநாட்டுக்குச் செல்வதற்கு வைகோவுக்கு விசா வழங்க பிரி.தூதரகம் மறுப்பு

சென்னை, நவ. 23

விசா மறுக்கப்பட்டதால் தனது லண்டன் பயணத்தை ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ ரத்துச்செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைகோவுக்குவிசாமறுக்கப்பட்டது குறித்து சென்னையிலுள்ள பிரிட்டிஷ் தூதரகம் சார்பில் யாரும் கருத்துத் தெரிவிக்கவில்லை. எனினும், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருவதாலேயே வைகோவுக்கு விசா மறுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

லண்டனில் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டமைப்பின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வைகோ சென்னையில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்துக்கு விசா விண்ணப்பம் அனுப்பியிருந்தார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## 2½ லட்சம் தமிழ் சிறுவரின் கல்வி வடக்கு மோதல்களால் பாதிப்பு

### யுனிசெவ் அமைப்பின் ஆய்வில் தகவல்

கொழும்பு,நவ.24

வடக்கில் இடம்பெற்றுவரும் கடும் மோதல்கள் காரணமாக சுமார் இரண்டரை லட்சம் தமிழ்ச் சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன என்று யுனிசெவ் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

சுமார் இரண்டரை லட்சம் தமிழ்ச் சிறார்கள் தங்களது ஆரம்பக் கல்வியைத் தொடர முடியாது அல்லலுறுவதாக யுனிசெவ் நிறுவனத்தின் ஆய்வுத் தகவலொன்று தெரிவிக்கிறது.

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வழங்குவதற்காக 65 ஆயிரம் பாடசாலை உபகரணங்கள் மற்றும் 400 ஆசிரியர்களுக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளியல் கல்லூரி - யாழ்ப்பாணம்

அரசியல் - S.M.ஜெனா - பரீட்சையில் அதிக புள்ளி பெற்றோர் விபரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01.பா.டிலக்ஷனா | J.H.L.C | 84 | 08.ர.கர்ஷனா | J.H.L.C | 76 |
| 02.யோ.றெபேக்கா | J.P.M.V | 84 | 09.ம.மதிசன் | J.M.H.C | 77 |
| 03.ஜெ.மாதங்கி | J.H.L.C | 80 | 10.ம.தனுபா | J.H.L.C | 76 |
| 04.அ.சசிகலா | J/I.C.M.V | 78 | 11.ம.நிரோஜா | J.I.C.M.V | 76 |
| 05.எ.தனுசியா | J/V.H.C | 78 | 12.வி.கயல்விழி | J.I.C.M.V | 76 |
| 06.த.பிரியங்கா | J.H.L.C | 77 | 13.மு.ரஞ்சனா | J/V.H.C | 76 |
| 07.வி.கலையழகி | J.H.L.C | 77 | 14.ஞா.டினோஜா | J.I.C.M.V | 75 |

தொடர்ந்தும் 40 பரீட்சைகள் நடைபெறும்.

(சி/555734) அனுமதிக்கு முந்துங்கள்.


## 31ஆம் நாள் இதய அஞ்சலி

யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலையில் நீண்டகாலமாக சேவை செய்து இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர் திரு.மு.சண்முகமூர்த்தி அவர்களின் பாசமிகு தந்தை

**அமரர் சுந்தரம்பிள்ளை முருகேசு**

(மூளாய் வீதி, வட்டுக்கோட்டை) அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை,
அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. (80079)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:15.04.1919



மறைவு: 06.12.2007

திதி: துவாதசி (24.11.2008)

### அமரர் சுந்தரம்பிள்ளை பொன்னம்மா

அன்புடன் அரவணைத்து அறிவினை நன்கு ஊட்டி
அவனியில் நாம் வாழ வழிகாட்டிய தெய்வமே!
ஆயிரம் உறவுகள் இருந்துமென்ன?
அவையணைத்தும் உங்கள் அன்பிற்கு ஈடாகுமா?
ஆண்டொன்று சென்றதம்மா
மாறவில்லை எம் துயரம்
ஆண்டொன்றென்ன பல நூறு ஆண்டுகள் சென்றாலும்
எம் விழிகளில் என்றும் நிலைத்திருக்கும்
உங்கள் இனிய முகம்.

163, புங்கங்குளம் வீதி,
அரியாலை. (80116)

குடும்பத்தினர்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1039 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

கும்பம் 17 33 36 51

21-11-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 500228917 - 500249655

ஜக்பொட் பரிசு ரூபா. 7,824,125/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 215,809 | 20/- | 4,316,180/- |
| 2 இலக்கங்கள் | 19,863 | 40/- | 794,520/- |
| 1 இல. + லக்கினம் | 19,620 | 60/- | 1,177,200/- |
| 2 இல. + லக்கினம் | 1,833 | 200/- | 366,600/- |
| 3 இலக்கங்கள் | 532 | 1000/- | 532,000/- |
| 3 இல. + லக்கினம் | 53 | 10,000/- | 530,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 7,824,125/- | - |
| மொத்தம் | | | 8,316,500/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 257,718 | | 8,816,500/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 8,306,330/-

தொடர் இலக்கம் 400227800 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 நொவெம்பர் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| நுவரெலியா | 500231485-5-39 |
| மொனராகலை | 500248461-0-09 |
| கண்டி | 500231263-2-45 |
| மாத்தளை | 500229899-1-18 |
| மட்டக்களப்பு | 500233046-3-12 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## வேகமாகப் பரவுகின்றது எலிக்காய்ச்சல் ஓரிரு மாதங்களில் இருநூறு பேர் பலி!

### சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு, நவ.24

நாட்டின் பல இடங்களில் ஏற்பட்டிருக்கும் எலிக்காய்ச்சல் காரணமாக கடந்த ஓரிரு மாதங்களில் 200 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த எலிக்காய்ச்சலால் விவசாயிகளே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ள அமைச்சு இந்நோய்க்கான சிகிச்சையை அரச வைத்தியசாலைகளில் மாத்திரம் பெறுமாறு கேட்டுக்கொண் டுள்ளது.

இந்த நோய் காரணமாக கடந்த 06 மாதங்களில் மாத்திரம் 6 ஆயிரத்து 400 பேர் பாதிக்கப்பட்டனர், என்றும் கடந்த 10 வருடங்களில் ஆயிரத்து 100 பேர் உயி ரிழந்துள்ளனர் என்றும் சிரேஷ்ட வைத்திய நிபுணர் டாக்டர் பலிகவதன தெரிவித்துள்ளார்.

தற்போது இந்த நோயால் கொழும்பு, அநு ராதபுரம், இரத்தினபுரி, கம்பஹா, கேகாலை, களுத்துறை, ஹம்பாந்தோட்டை, மாத்தளை மற்றும் காலி ஆகிய இடங்களில் உள்ளவர்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு மேலும தெரிவித்துள்ளது.

இந்நோயால் விவசாயிகளே அதிகம் பாதிக்கப்படுவதால் அவர்களுக்கு இது தொடர்பாக அறிவுறுத்த விசேட வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

(அ-சி)

## மத்திய கல்லூரித் தடாகத்தில் ஏனைய மாணவரும் பயிற்சி பெறலாம்

நல்லூர், நவ. 24

யாழ்.மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்படும் நீச்சல் தடாகத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து மாணவர்களும் நீச்சல் பயிற்சி பெறக்கூடிய வசதி செய்யப்படும்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் எஸ். பத்மநாதன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

புதிய நீச்சல் தடாகம் அமைப்பதற்கான ஆரம்ப வைபவம் நடைபெற்ற வேளையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

(அ-111)


## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் இன்று (24.11.2008) விநியோகிக்கப்படும்.
பதிவுகளை மேற்கொள்ளவும். (79842)

றாஜீவ் நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.


## கிளினிக்குகள் ஒழுங்காக நடைபெறுகின்றன

கோப்பாய், நவ. 24

கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் பல்வேறு நோய்களுக்குமான ''கிளினிக் சிகிச்சைகள் ஒழுங்காக நடை பெற்று வருகின்றன.

நீரிழிவு, குருதி அமுக்கம், குடும்பக்கட்டுப்பாட்டு முறைகள் தொடர்பான ''கிளினிக்குகள்'' ஒழுங்காக நடைபெற்று வருவதாக நோயாளர்கள் திருப்தி தெரிவிக்கின்றனர்.

(72)

## மரண அறிவித்தல்கள்

### யோசெப் லூர்த்தம்மா

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோசெப் லூர்த்தம்மா நேற்று முன்தினம் (22.11.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிலேந்திரன்- அன்னம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும் சின்னப்பு யோசெப்பின் அன்பு மனைவியும் சந்திரயோகம், .மேரிறீற்றா, காலஞ்சென்ற சில்வெஸ்ரர், மேரிதிரேசா, புவனேஸ்வரி, புஸ்பலீலா, ரீசா, அல்பிரெட், கிறேசியன், சந்திரபவானி, மஸ்ரிக்கலா, கென்றிவாட் ஆகியோரின் அன்புத் தாயும் சந்திரா, சமரேஸ்வரன், கிருபை, ரங்கநாதன், சாந்தகுமார், சிமியோன், றஞ்சினிதேவி, பூமணி, செல்வரத்தினம், அந்தோனிமுத்து, மரீனா ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (80122)

தகவல்:
பிள்ளைகள்.

### திருமதி கனகசிங்கம் கண்மணி



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசிங்கம் கண்மணி நேற்று (23.11.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசிங்கத்தின் மனைவியும் காலஞ்சென்ற சிவகுரு மற்றும் பேரம்பலம் ஆகியோரின் சகோதரியும் பாலசிங்கம், தர்மகுலசிங்கம், வசந்தகுலமணி, வசந்தமலர், வசந்தராணி, நிர்மலா, தனலக்சுமி ஆகியோரின் அன்புத் தாயும் மதிவதனி, ஸ்ரீலோகநாதன், தேவதாசன், நவநீதன், நிர்மலானந்தன், திருமால்மருகன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2008) திங்கட்கிழமை சிலாபத்தில் 4 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.80, பழம் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (80119)

தகவல்:
மருமகன் செ.ஸ்ரீலோகநாதன்
(ஆசிரியர்).

### சின்னப்பு ஜெயராஜா



ஏழாலை கிழக்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும் 22, சீனியர் லேனில் வசித்தவரும் புளியங்கூடலை வசிப்பிடமாகக் கொண்ட சின்னப்பு ஜெயராஜா 22.11.2008 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - லட்சுமி தம்பதியினரின் மகனும் சங்கரப்பிள்ளை - தையல்முத்து தம்பதியினரின் மருமகனும் பரஞ்சோதி (தேவி)யின் அன்புக் கணவரும் துஷியந்தன் (லண்டன்) இன் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான நல்லையா, முத்தையா, சின்னத்தம்பி, கந்தையா மற்றும் சிவக்கொழுந்து, கனகம்மா, சிதம்பரப்பிள்ளை, தம்பிராசா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான திருமதி தவமணி, திருமதி வாடாமலர், தங்கராசா மற்றும் சாந்தலிங்கம் (லண்டன்), திருமதி அருந்ததி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2008) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுருவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கூடல் வடக்கு,
ஊர்காவற்றுறை.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இரத்தினசிங்கம் செல்வநேசன்

யாழ்.கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, கிருலப்பனையை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் செல்வநேசன் 22.11.2008 சனிக்கிழமை சிவப்பேறுபெற்றார்.

அன்னார் இரத்தினசிங்கம் - நாகேஸ்வரி தம்பதியரின் ஏக புதல்வனும் செல்வமலர் (கனடா), கனகரஞ்சினி (யாழ்.) ஆகியோரின் பாசமுள்ள சகோதரனும் பாஸ்கரன் (கனடா), புலேந்திரராஜா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுபாசினி, சுதர்சினி, சுகந்தினி, சுபராஜ், தர்மராஜ், நிசாந்தன், அனித்தா, நிசாந்தி ஆகியோரின் அன்பு மாமனும் தேவகுமார், ரவீந்திரநாதன், நர்மிலன், நிசாந்தி, கார்த்திகா, சுதர்சனன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.11.2008) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் மாலை 5 மணிவரை கல்கிசை மகிந்தமலர்ச்சாலை மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (25.11.2008) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.30 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று, பிற்பகல் 2 மணிக்கு கல்கிசை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொடர்பு: 0777733122
வசந்தநாதன் பாபு.

[illegible] சுபராஜ்,
தொடர்பு: 6473464597 (கனடா).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## பொதுத்தேர்தல் நடக்குமா அல்லது சர்வஜன வாக்கெடுப்பா?

யுத்தக் களமுனையில் முன்நகர்வுத் தீர்மானங்களையும், அதையொட்டிய நடவடிக்கைகளையும் வேக வேகமாக முன்னெடுத்து வரும் அரசுத் தரப்புக்கு, அரசியல் கள முனையில் அடுத்த நடவடிக்கை என்ன வென்பதைத் தீர்மானிப்பதிலும், அதைச் செயற்படுத்துவதிலும் மட்டும் பெரும் தடுமாற்றம் நீடிப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

பெருமளவு நிதியையும் நாட்டின் தேசிய வளத்தையும் தனது போர்வெறித் தீவிரத் திட்டத்துக்காகக் கொட்டிக்கொடுத்து வீணடித்து வரும் இந்த அரசு, அதனால் பெரும் பொருளாதார நெருக்கடி நிலையைத் தேசத்துக்கு ஏற்படுத்தியிருக்கின்றது.

போதாக்குறைக்கு தீர்க்கதரிசனமற்ற திட்டச் செயற்பாடுகள், ஊழல்கள், மோசடிகள், வீண் விரயங்கள், தவறான ஆட்சி முறை நடவடிக்கைகள் மற்றும் சர்வதேசப் பொருளாதாரப் பின்னடைவு நிலைகள் போன்றவையும் நாட்டின் பொருளாதாரத்தைப் பெரும் அதலபாதாளத்துக்கு வீழத்தி நிற்கின்றன.

தொடரும் கொடூர யுத்தம் நாட்டின் அபிவிருத்தி மற்றும் வளர்ச்சிப் பாதைகளைத் தடுத்துவிட, பெரும் பொருளாதார நெருக்கடி நிலைக்குள் மீள முடியாமல் இலங்கைத் தீவு ஆழ்ந்துபோகும் இக்கட்டு நெருங்கி வருகின்றது.

நாட்டின் வடக்கு, கிழக்கு, தெற்குக் கரையோரங்களை நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் ஆழிப்பேரலைகள் தாக்கிப் பேரனர்த்தத்தை ஏற்படுத்தியமை போல-

இலங்கையின் வாழ்வியல் இருப்பையே சின்னா பின்னமாக்கக் கூடிய ஆபத்தை ஏற்படுத்தும் பொருளாதாரப் பேரலை ('சுனாமி') எச்சமயத்திலும் தேசத்தைத் தாக்கலாம் என்று இப்போது அஞ்சப்படுகின்றது.

இந்த யதார்த்தப் புறநிலையும், ஆபத்து ஏதுநிலையும் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அவரது ஆலோசகர்களுக்கும் நன்கு தெரிந்த - புரிந்த - விடயமே.

தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் வரையாகும். அதேவேளை, ஜனாதிபதியின் தற்போதைய பதவிக்காலம், 2012 நவம்பர் வரையாகும்.

முற்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதாயின் கூட, அதற்கும் 2009 நவம்பர் வரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காத்திருக்க வேண்டும். ஒரு ஜனாதிபதி தமது முத[illegible]ாவது [illegible]விக் காலத்தின் இறுதியில் முற்கூட்டியே தே[illegible]லை [illegible]த்துவதாயின் அதற்கு அவர் தமது முதலாவ[illegible] காலத்தில் நான்கு ஆண்டுகளையாவது பூாத்தி செய்திருக்கவேண்டும் என்பதே சட்ட விதி.

ஆகவே, ஜனாதிபதித் தேர்தலை இப்போதைக்கு அவர் நடத்த முடியாது. அதற்கு அவர் இன்னும் ஓராண்டு காத்திருக்க வேண்டும்.

தற்போது சீர்கெட்டுவரும் நாட்டின் பொருளாதாரப் பின்னடைவு, இனிமேல் எந்நேரத்திலும் பொருளாதாரப் பேரலையாக நாட்டைத் தாக்கலாம் என்ற நிலைமை. அத்தகைய சூழல் ஏற்பட்டால் அதற்குப் பின்னர் மக்களிடம் முகம் கொடுப்பதோ செல்வாக்கைப் பெறுவதோ இந்த அரசுக்குச் சாத்தியமற்றது என்பது எல்லோருக்கும் வெளிப்படையாகப் புரிந்த விடயமே.

எனவே, அத்தகைய 'பொருளாதார சுனாமி' தாக்க முன்னர் -

இப்போது யுத்த வெற்றி அறிவிப்புகளால் தென்னிலங்கையில் தமது அரசுக்குக் கிளர்ந்திருக்கும் செல்வாக்கு மற்றும் ஆதரவை வசமாகப் பயன்படுத்தி -

தமது அரசியல் எதிர்காலத்தையும், அதிகாரச் செல்வாக்கையும் எப்படி உறுதிப்படுத்திக் கொள்வது என்ற முனைப்பில் அரசுத் தலைவர் இருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலை நடத்த ஒரு வருடம் காத்திருக்க வேண்டும் என்பதால் -

அதற்கு முன்னர் இப்போதே நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி, தமது அரசின் பதவிக்காலத்தை அடுத்த ஆறு ஆண்டுகளுக்குத் தொடர்வதை இப்போதே உறுதிப் படுத்திக் கொள்வது குறித்து அரசுத் தலைவர் ஆராய்கின்றார் என்றும் கூறப்படுகின்றது.

ஆனால், அதிலும் அவருக்கு சில சிக்கல்கள் உள்ளன.

பொதுத்தேர்தல் அறிவிப்புக்கும் வாக்களிப்புத் தினத்துக்கும் இடையில் யுத்தக் களமுனையில் அரசுத் தரப்புக்குப் பின்னடைவுகள், களநிலை மாற்றங்கள் போன்றன ஏற்பட்டுவிட்டால் அது தேர்தலில் அரசுக்குப் பலத்த அடியாகி விடலாம் என்ற அச்சம் அரசுப் பக்கம் உள்ளது.

அத்தோடு, பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவிலிருந்து அரசுப் பக்கம் தாவி, அமைச்சுப் பதவிகளைப் பரிசாகப் பெற்றுக் கொண்டுள்ள 25 எம்.பிக்களும் இப்போது - முற்கூட்டியே - நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதைக் கடுமையாக எதிர்க்கிறார்கள். அப்படித் தேர்தல் முற்கூட்டியே நடந்தால் தங்களின் அரசியல் எதிர்காலம் அதோ கதி[illegible]கிவிடும் என்ற பயம் அவர்களுக்கு.

அதனால், பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தாமல், தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தை மேலும் ஆறு ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெற்றால் என்ன என்ற திட்டமும் அரசுத் தலைமையினால் பரிசீலிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

1977 இல் வெளியான தமது அரசின் பதவிக் காலத்தை இப்படி ஒரு சர்வஜன வாக்கெடுப்பு மூலமே 1989 வரை ஜனாதிபதி ஜெயவர்த்தனா நீடித்தார் என்பதும் குறிப் பிடத்தக்கது.

எது, எப்படியென்றாலும் யுத்தக் களமுனையில் இனி அரங்கேறப்போகும் நிகழ்வுகளின் போக்கே இத்தகைய தேர்தல் அபத்தங்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் என்பது மட்டும் உறுதி.

# கிளிநொச்சி - முல்லைத்தீவு மீது இராணுவம் இறுக்கமான முற்றுகைப் பிரயோகம்

**'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை களநிலை ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் அப்பத்திரிகையில் நேற்று [23.11.2008] அன்று எழுதியுள்ள களநிலை ஆய்வில் ஒரு பகுதி இது**



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தமது மாவீரர் தின உரையை நிகழ்த்துவதற்கு இன்னமும் சில தினங்களே உள்ள நிலையில் கிளிநொச்சிப் பகுதியையும், அதை அண்டிய முல்லைத்தீவுப் பிரதேசத்தையும் இராணுவத்தினர் முற்றுகைக்குள் வைத்துள்ளனர்.

எல்லாத் தரைப்பாதைகளும் மூடப்பட்டுள்ளன. பொதுமக்களுக்குத் தேவையான அவசர மருந்து பொருள்களையும், உணவையும் ஏற்றிச் செல்லும் வாகனங்களையும் தவிர வேறு எந்தவித வாகனப் போக்குவரத்துக்கும் கடுமையான கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நோக்கிச் செல்லும் ரயில்கள் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் அநுராதபுரத்துடன் நிறுத்தப்பட்டு விடுகின்றன. முன்னர் மதவாச்சி வரைக்கும் ரயில் சேவை நடைபெற்று வந்தது. பொது மக்களோ வாகனப்போக்குவரத்தோ வவுனியாவுக்கு தெற்கு நோக்கிய திசையில் அனுமதிக் கப்படுவதில்லை. வவுனியாவுக்கு செல்வோர் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர்.

புலிகள் வவுனியாவுக்கு வெளியில் ஊடுருவுவதையும் தாக்குதல்களைமேற்கொள்வதையும் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை.

மாவீரர் தினத்துக்கு முன்னோடியான நிகழ்வுகள் வன்னியில் ஆரம்பமாகியுள்ளன. மாவீரர்களின் உறவினர்கள் மாவீரர் துயிலும் இல்லங்களில் ஏற்கனவே பெரும் எண்ணிக்கையில் கூடி தமது சமயச் சடங்குகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர். அடுத்த வியாழக்கிழமை புலிகளின் தலைவர் தமது 19 ஆவது மாவீரர் தின உரையை நிகழ்த்த விருக்கிறார். வெளிநாடுகளிலும் புலம் பெயர்ந்தவர்கள் மாவீரர் தினத்தை பெரும் எடுப்பில் கொண்டாட ஆயத்தமாகி வருகின்றனர்.

இந்த நிகழ்வுகள் குறிப்பாக புலிகள் தடை செய்யப்பட்டுள்ள நாடுகளில் நடைபெறும் இந்நிகழ்வுகளை கண்காணிக்கும்படி அந் நாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

பூநகரியும் அதனை அண்டிய பகுதிகளும் படையினரால் கைப்பற் றப்பட்டிருப்பது தேசிய ரீதியில் கொண்டாட்டங்களுக்கும் ஆரவாரங்களுக்கும் ஏதுவாகியுள்ளது. ஊக்கமடைந்துள்ள இராணுவத்தினர் கிளிநொச்சி நோக்கி மேலும் ஒரு களமுனையை ஆரம்பித்துள்ளனர். பூநகரி - பரந்தன் வீதியில் படையினர் இப்போது முன்னேறத் தொடங்கியுள்ளனர்.

**பாதை திறக்க மும்முர முயற்சி**

பூநகரி வீழ்ச்சியைத் தொடர்ந்து மன்னார், யாழ்ப்பாணம் பாதையைச் சீரமைக்கும் வேலைகளைப் படையினர் காலம் தாழ்த்தாது ஆரம்பித்து விட்டனர்.

சங்குப்பிட்டியில் இறங்குதுறையொன்று அமைக்கப்படவிருக்கிறது. அங்கிருந்து படகுப் பாதைச் சேவையொன்று கேரதீவுக்கு ஆரம்பிக்கப்படும் .

இருபது வருடங்களுக்கு முன்னர் படகுப் பாதை சேவையொன்று இங்கு நடைபெற்றுள்ளது. இப்பொழுது ஆரம்பிக்கப்படும் புதிய இறங்குதுறை சங்குப்பிட்டியில் முன்னர் படகுப் பாதைச் சேவை நடைபெற்ற இடத்திலிருந்து வெகு தூரத்தில் அமையும் என்று தெரிகிறது. கெரில்லாக்களின் ஆட்டிலறி வீச்சுக்கு இலக்காகாமல் இருக்கவே இந்த ஏற்பாடு.

வன்னியின் மேற்குப் பகுதிக்கான அபிவிருத்தித் திட்டமொன்றை அரசு தீட்டத் தொடங்கியிருக்கிறது. பாதுகாப்பு நிலை ஸ்திரமானதும் இத் திட்டம் செயற்படுத்தப்படும்.

இதற்காக பூநகரியில் இராணுவத் தளம் ஒன்று நிறுவப்படும். அதன் பின் பொதுமக்கள் குடியமர்த்தலும் பொது மக்களுக்காக ஏ-32 வீதித் திறப்பும் இடம்பெறும்.

பேய்முனையில் மீன்பிடிக் கிராமம் ஒன்றை உருவாக்குவது அரசின் இன்னொரு திட்டமாகும்.

இப்போதைய இராணுவ முன்னெடுப்புகளின் முக்கிய தேவையாக இராணுவத்தினரின் எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பது அவசியமாகியுள்ளது. இராணுவத்தை விட்டு ஓடியவர்களின் இடங்களை நிரப்பு வதற்கு மட்டுமல்ல இராணுவத்தை மேலும் பலப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

இராணுவத்திலிருந்து ஓடியவர்கள் திரும்பி வந்தால் மன்னிப்பு அளிக்கப்படும் என்ற மிகப் பிந்திய அறிவிப்பானது ஒரே நாளில் 2600 பேர் மீண்டும் திரும்புவதற்கு வழி கோலியது.

## கைப்பற்றிய பகுதிகளின் அபிவிருத்தி: புதிய திட்டங்கள் உருவாக்கம்

இந்த வகையில் புதியவர்களை சேர்ப்பதற்கான நடவடிக்கைகளும் மும்முரப்படுத்தப்பட்டுள்ளன.

பூநகரியின் வீழ்ச்சியும், மாங்குளத்தின் வீழ்ச்சியும் விடுதலைப் புலிகளுக்கு பெரும் பின்னடைவாக இருக்கும் என்று கருதப்படுகின்றது.

இராணுவ முன்நகர்வுகள் இடம் பெற்று வந்தாலும் அரசதலைவர்களும் இராணுவ உயர் தலைவர்களும் மாவீரர் தின உரையில் பிரபாகரன் என்ன கூறுவார் என்பதை அறிவதற்கு ஆர்வம் கொண்டவர்களாகவே உள்ளனர். இருந்தாலும். புலிகள் மீது அழுத்தங்களை அடுத்துவரும் தினங்களுக்கு மிகப் பலமாகவே பிரயோகிப்பது என்று அவர்கள்உறுதி கொண்டுள்ளனர். (ப)

# காசநோயாளர்களுக்கான மருந்து வகைகளை குடாநாட்டுக்கு எடுத்து வர முடியாத நிலை

## ஆதங்கப்படுகிறார் பொறுப்பதிகாரி

யாழ்ப்பாணம், நவ.24

யாழ்.மாவட்டத்தில் உள்ள காசநோயாளர்களுக்கு வழங்கப்படும் மருந்துகளை எடுத்துவர முடியாத நிலை தொடர்வதாக மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி வைத்திய கலாநிதி சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் சராசரியாக 3 மாதங்களில் 100 காசநோயாளர்கள் இனங்காணப்படுகின்றனர். இதனால் ஆகக் குறைந்தது 100 காசநோயாளர்களுக்குரிய மருந்து வகைகளைக் கையிருப்பில் வைத்திருப்பது அவசியம். எனினும் தற்போது இவ்வகை மருந்துகள் முடிவடையும் நிலையில் இருக்கின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காச நோயாளருக்கான மருந்துகளைக் கப்பல் மூலம் தருவித்தால் காலதாமதம் ஏற்படுவதோடு, மருந்துகள் பழுதடையவும் சாத்தியமுண்டு. அதேவேளை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் விமானச் சேவை மூலமும் இந்த மருந்துகளைக் கொண்டு வரு வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. எனவே தனியார் விமான சேவைகளினூடாக 25 கிலோ கிராம் எடை மட்டுமுடைய காசநோயாளருக்கான மருந்து வகைகளை எடுத்துவர பொது அமைப்புகளும், சமூக நலனில் அக்கறை கொண் டோரும் உதவ முன்வர வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (04)

## உடுவில் பிரதேச அபிவிருத்திக்கு மூன்றரை லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், நவ.24

'ஜாதிக சவிய கமநெகும' அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தேச நிர்மாணம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் மூன்று வேலைத் திட்டங்களுக்கு மூன்று லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

வேலைத் திட்டங்களில் ஐந்தில் ஒரு பங்கு மக்களின் பங்களிப்புடன் முன் னெடுக்கப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தலுடன் இந்நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

ஏழாலை தென்மேற்கு கோட்டைக்காடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்த ஒரு லட்சம் ரூபாவும்-

ஏழாலை கிழக்கு புனித இசி தோர் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கு குடிதண்ணீர் வசதி ஏற்படுத்த ஒரு லட்சம் ரூபாவும், தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை பெறுவதற்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. (202-68)

### நாளை

கார்த்திகை 10: 25.11.2008
செவ்வாய்க்கிழமை
திதி: திரயோதசி
மு.இ.07.32 வரை
நட்சத்திரம்: சுவாதி
பி.இ.04.18 வரை
பிரதோஷ விரதம்
சுபநேரம்: 10.42 - 12.12
ராகுகாலம்: 03.12 - 04.42

## 'முதுசொம்' நூல் வெளியிடப்பட்டது

நாவற்குழி, நவ.24

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண சமூக நலத் துறைத் திணைக்களம் ''முதுசொம்'' எனும் பெயரில் நூல் ஒன்றை அண்மையில் வெளியிட்டுள்ளது.

இந்நூலில் வடக்கு மாகாணத்தில் வசிக்கின்ற முதியோர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவற்றின் தீர்வுக்கான எதிர்வுகூறல்கள் உள்ளிட்ட விடயங்கள் அறிஞர்கள் பலரின் ஆய்வுக் கட்டுரைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. (202-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அகவை எழுபதில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்-24.11.2008



சாவகச்சேரி வடக்கு, டச்சு வீதியில் வசிப்பவரும் இலங்கை, புல்மோட்டை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்தில் சேவையாற்றி இளைப்பாறியவரும் சாவகச்சேரி வடக்கு, கிராம்புவில், படையாண்டான் தோட்டம், கந்தசாமி கோயில் தர்மகர்த்தா சபைத்தலைவரும், கிராம்புவில் பாலமுருகன் அறநெறிப்பாடசாலையின் தலைவருமாகிய

திருவாளர்

**செல்லப்பா பாலசிங்கம்**

அவர்கள் இன்று திங்கட்கிழமை அகவை எழுபத்தொன்றில் கால் பதிக்கின்றார். எமது வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் அயராது உழைத்து அன்பாலும், பண்பாலும் எம்மை அரவணைத்து வழிகாட்டிய இவர் சீரும் சிறப்புமாக நோய், நொடியின்றி பல்லாண்டு காலம் நலமாக வாழ எல்லாம் வல்ல படையாண்டான் தோட்டம் முருகப் பெருமானை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

**அன்பு மனைவி, பிள்ளைகள், சகோதரர்மார், சகோதரிமார், மைத்துனர்மார், மைத்துனிமார், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

டச்சு வீதி,
சாவகச்சேரி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இன்று (24.11.2008) திங்கட்கிழமை நடைபெறுகின்ற பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (H.N.D.A) பட்டத்தைப் பெறுகின்ற **செல்வி சுஜந்தினி தனுஸ்கோடி** அவர்களை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
திரு.க.குகனேஸ்வரன் (ஆனந்தன்)
குடும்பத்தினர்.

8ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
(80093)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இன்று நடைபெறும் உயர் தொழில்நுட்ப நிறுவன பட்டமளிப்பில் கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா (HIGHER NATIONAL DIPLOMA IN ACCOUNTANCY) பட்டம் பெறும் எமது பெறாமகன் **வரதராஜா வரதபாரன்** அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அன்னை சரஸ்வதி அம்பாள் அருள் பெற்று மேலும் உயர்வு பெறப்பிரார்த்திக்கின்றோம்.

சித்தப்பா, சித்தி, ஐ.முருகதாசன்-ஜெயகௌரி,
ஐ.குமரதாசன்- விஜயா.

59, கலைமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(80096)

## அரசாங்க அறிவித்தல்
## யாழ்.மாவட்டச் செயலகம்
### வாகனங்கள் சேவீஸ் செய்வதற்கான கேள்வி- 2009

யாழ்.மாவட்டத்திலுள்ள கீழ் குறிப்பிடப்படும் வாகனங்களைச் சேவீஸ் செய்வதற்கான கேள்வி கோரப்படுகின்றது. இது தொடர்பான நிபந்தனைகளையும் விண்ணப்பப் படிவத்தினையும் மாவட்டச் செயலகக் களஞ்சிய நலன்புரிக்கிளையில் அலுவலக நாள்களில் காலை 9 மணி தொடக்கம் பி.ப.2.15 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 100இனைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை தலைவர், மாவட்டச் செயலக கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிட்டு, கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் **வாகனங்கள் சேவீஸ் செய்வதற்கான கேள்வி விண்ணப்பம்–2009** எனக் குறிப்பிட்டு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலக கேள்விப் பெட்டியில் நேரடியாகவோ 2008.12.18 ஆம் திகதி பி.ப.2 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்ப வேண்டும். அன்றைய தினம் பி.ப. 3 மணிக்கு கேள்விப் பத்திரப் பெட்டி திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதியொருவரோ சமூகமளிக்கலாம்.

**வாகனங்கள் விபரம்**

★ பிக்கப்
★ வான்
★ கார்
★ மோட்டார் சைக்கிள்
★ லொறி
★ முச்சக்கர வண்டி
★ ஜீப்
★ உழவு இயந்திரம்
★ வவுசர்

**க.கணேஷ்,**
மாவட்ட செயலரும், அரசாங்க அதிபரும்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி/55704)

## அளவெட்டிப் பாடசாலைகளின் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ.24

அளவெட்டி சைவ வாலிப சங்கம் பாடசாலைகளுக்கிடையே நடத்திய பண்ணிசை, பேச்சு, மனனப் போட்டிகளின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:

**பண்ணிசைப் போட்டி**
**பாலர் கீழ்ப்பிரிவு: ஆண்**

தி.திலக்ஷன்(அள.வடக்கு, அ.மி.த.க. பாடசாலை), இ.செந்தூரன் (சதானந்தா வித்தியாசாலை), ஜ.நிறோஜன் (அள.வடக்கு, அ.மி.த.க.பாடசாலை).

**பெண்**

ஜெ.ஜெதுஷா (சதானந்தா வித்தியாசாலை), சி.சிவதர்சினி (அருணோதயக் கல்லூரி), ஜீ.சோமிகா (அள.வடக்கு, அ.மி.த.க. பாடசாலை).

**பாலர் மேற் பிரிவு: ஆண்**

நி.சிவாயன் (அருணோதயக் கல்லூரி), ஜ.சிவாம்சன்(அள.வடக்கு அ.மி.த.க.பாடசாலை), ந.செந்தூரன் (சதானந்தா வித்தியாசாலை).

**பெண்**

சி.கேதுஷா (அள.வடக்கு அ.மி.த.க. பாடசாலை), வ.சாத்வீகா (அள.வடக்கு அ.மி.த.க.பாட சாலை), ஜெ.சுகன்யா (அருணா சலம் வித்தியா சாலை).

**கீழ்ப்பிரிவு: ஆண்**

சி.தர்சன் (அருணோதயா கல்லூரி), ஜெ.ஜெயஷாந்தன் (சதானந்தா வித்தியாசாலை), த.வராகன் (அருணோதயக் கல்லூரி).

**பெண்**

தே.சுகந்தினி (அருணோதயக் கல்லூரி), பே.நிதர்சனா (சீனன்கலட்டி வித்தியாசாலை), ச.துவன்ஜா (சீனன்கலட்டி வித்தியாசாலை).

**பண்ணிசைப் போட்டி**
**மத்திய பிரிவு: ஆண்**

செ.வாரணன் (அருணோதயக் கல்லூரி), ஜோ.டிலீப்குமார் (அருணோதயக் கல்லூரி), நி.சிந்துரன் (அருணாசலம் வித்தியாசாலை).

**பெண்**

கே.சோபனா (அருணோதயக் கல்லூரி), ம.நிக்ஸனா (அருணோதயக் கல்லூரி).

**மேற்பிரிவு: பெண்**

ர.துஷயந்தினி (அருணோதயக் கல்லூரி), சி.ஜீவனா (அருணோதயக் கல்லூரி), த.சயந்தா (அருணோதயக் கல்லூரி).

**பேச்சுப்போட்டி**
**பாலர் பிரிவு: ஆண்**

இ.செந்தூரன் (சதானந்தா வித்தியாசாலை), ற.சிவகஜன் (அருணோதயக் கல்லூரி), ஜ.நிரோஜன் (அள.வடக்கு, அ.மி.த.க.பாடசாலை).

**பெண்**

ஜெ.கமலினி (சீனன் கலட்டி வித்தியாசாலை), சி.சிவதர்சினி (அருணோதயக் கல்லூரி), ஜெ.நபிசா (சீனன் கலட்டி வித்யாசாலை).

**பேச்சுப் போட்டி**
**பாலர் மேற்பிரிவு:ஆண்**

ஜ.சிவாம்சன் (அள.வடக்கு, அ.மித.க.பாடசாலை), ந.செந்தூரன் (சதானந்தா வித்தியாசாலை), கு.சுஜீவன் (சதானந்தா வித்தியாசாலை).

**பெண்**

சி.வர்சிகா (அள.வடக்கு, அ.மித.க.பாடசாலை), உ.கபியங்கா (அள.வடக்கு, அ.மித.க.பாடசாலை), வ.சாத்வீகா (அள.வடக்கு, அ.மி.த.க.பாடசாலை).

**பேச்சுப் போட்டி**
**கீழ்ப்பிரிவு: ஆண்**

த.வராகன் (அருணோதயக் கல்லூரி), வீ.வினோதன் (சீனன் கலட்டி வித்தியாசாலை), ந.சுலக்சன் (அருணாசலம் வித்தியாசாலை).

**பெண்**

ம.பானுஷா (அருணோதயக் கல்லூரி), உ.உதயதர்சினி (அருணாசலம் வித்தியாசாலை), க.மேனுஷா (சீனன் கலட்டி வித்தியாசாலை).

**மத்திய பிரிவு: ஆண்**

செ.வாரணன் (அருணோதயக் கல்லூரி), ந.மயூரன் (அருணோதயக் கல்லூரி).

**பெண்**

க.நேமினா (அருணாசலம் வித்தியாசாலை), ர.சியாமளா (அருணோதயக் கல்லூரி).

**மேற்பிரிவு: ஆண்**

க.பசிலன் (அருணோதயக் கல்லூரி).

**பெண்**

ச.கோபிகா (அருணோதயக் கல்லூரி), பூ.பிரசாந்தி (அருணோதயக் கல்லூரி).

**மனனம்**
**பாலர் மேற்பிரிவு: ஆண்**

[illegible] (அள.வடக்கு, அ.மி.த.க.பாடசாலை), இ.இரஜி வர்ணன் (அள. வடக்கு, அ.மி:த.க.பாடசாலை).

**பெண்**

பி.ராதிகா (அருணோதயக் கல்லூரி), ப.கீர்த்திகா (அள.வடக்கு, அ.மி.த.க. பாடசாலை), உ.கபியங்கா (அள.வடக்கு, அ.மி.த.க.பாடசாலை).

(204)

## வரவு செலவுத்திட்டம்- 2009

நகரசபை கட்டளைச் சட்டத்தின் 1979ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 255ஆம் அத்தியாயமான 178 (3)ஆம் பிரிவின் பிரகாரம் 2009ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் 25.11.2008ஆம் திகதி தொடக்கம் ஏழு (7) நாள்களுக்கு அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி கு.ஆறுமுகம்
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
24.11.2008
(சி/555721)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (24.11.2008) திங்கட்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெறுகின்ற பட்டமளிப்பு விழாவில் HIGHER NATIONAL DIPLOMA IN MANAGEMENT (H.N.D.M) பட்டம் பெறுகின்ற திருமதி நிரஞ்சனா ஜெயசீலன் அவர்கள் மானிப்பாய் மருதடி விநாயகரினதும், காளியம்பாளினதும் அருளால் மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

16A, Vavarsat Place,
Colombo-06
(80097)

திரு.திருமதி கணேசலிங்கம்
குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (24.11.2008) திங்கட்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (H.N.D.B.S.) 2008ஆம் ஆண்டிற்கான கற்கை நெறியிற் சிறப்புச் சித்தி பெறும் **செல்வி கலிஸ்ரா நீக்கிலாஸ்** அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

புனித அந்தோனியார்
கோயிலடி,
நாவற்குழி.
(80092)

**குஞ்சன்மி,**
**கஜனி,**
**கனிபுஷ்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (24.11.2008) திங்கட்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2008ஆம் ஆண்டிற்கான (H.N.D.B.S.) கற்கை நெறியிற் சிறப்புச் சித்தி பெறும் **செல்வி கலிஸ்ரா நீக்கிலாஸ்** அவர்கள் மென்மேலும் கல்வியிற் சிறப்புகளைப் பெற்றுத் தக்க பயன்களையும் பெற வேண்டுமென பாராட்டி வாழ்த்துகின்றோம்.

புனித அந்தோனியார் கோயிலடி,
நாவற்குழி.
(80091)

**சின்னக்கா,**
**அன்ரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினரால் இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் அண்மையில் நடத்தப்பட்டது. கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை மருத்துவர் வே.ஆறுமுகம் நோயாளர்களைப் பரிசோதிப்பதையும், கண் பார்வையில் குறைபாடு காணப்பட்ட ஒருவருக்கு கழகத் தலைவர் லயன் செ.சரவணமுத்து மூக்குக் கண்ணாடி வழங்குவதையும் கழக உறுப்பினர்களையும், பரிசோதனையில் பங்குபற்றிய மருத்துவர்களையும் படங்களில் காணலாம்.
*(படங்கள்: தென்னவர்)*

### உணவு வாகன அணி சென்ற போதிலும்
## பொதுமக்கள் வன்னிக்கு பயணமாக ஓமந்தையில் படையினர் அனுமதிக்கவில்லை

வவுனியா, நவ. 24

நோயாளர்கள் உட்பட வன்னி செல்வ தற்குக் காத்திருக்கும் சுமார் 200 பேர் ஓமந்தை சோதனை நிலையம் ஊடாகச் செல் வதற்கு நேற்று முன்தினம் படையினர் அனு மதிக்கவில்லை.

வன்னிக்கு வாகன அணிகள் செல்வ தால் தம்மையும் செல்ல அனுமதிக்கு மாறு சுமார் 200 பேர் படையினரிடம் கோரினர். ஆனால் பொதுமக்கள் எவரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு வலயங் களின் கல்விப் பணிப்பாளர்கள், கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர், மக்கள் வங்கியின் முல்லைத்தீவு அலு வலக முகாமை யாளரும் மற்றும் 15 பாட சாலைகளைச் சேர்ந்த அதிபர்கள், மூன்று அம்புலன்ஸ் களில் 70 நோயாளர்கள் ஆகியோர் உட்பட சுமார் 200 பேர் இவ்வாறு ஓமந் தையில் கடந்த பல நாள்கள் காத்துக் கிடக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட் டது.

இதேவேளை, வன்னியில் இருந்து வந்தவர்களை வவுனியா செல்ல படையி னர் அனுமதித்தனர்.

ஓமந்தை ஊடான போக்குவரத்து, கடந்த 19ஆம் திகதி முதல் தடைப்பட்டி ருந்தது. செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தமது பிரசன்னத்தை விலக்கிக் கொண்ட தால் போக்குவரத்துத் தடைப்பட்டி ருந்தது.

வன்னிக்கான வாகன அணிகள் செல் வதற்காக விசேட ஏற்பாட்டின் கீழ், செஞ் சிலுவைக் குழுவின் பிரசன்னம் இருந்த போதே மக்கள் தம்மை வன்னி செல்ல அனு மதிக்குமாறு கோரினர் எனத் தெரிவிக்கப் பட்டது. (அ-1)

## தமிழ்ப் பிரதேசங்களில் பணிபுரிந்த வைத்தியர்கள் பலரும் வெளியேறினர்

மட்டக்களப்பு,நவ.24

திருகோணமலை, கல்முனை, மன் னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றிய தென்னிலங்கையைச் சேர்ந்த வைத்தியர் கள் அனைவரும் அங்கிருந்து வெளியேறி யுள்ளனர்.

வவுணதீவு, நாவற்காடு வைத்தியசாலை யில் கடந்த வாரம் இடம்பெற்ற தென்னி லங்கை வைத்தியர் ஒருவரின் படுகொலையை அடுத்து பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி ஏனைய தென்னிலங்கை வைத்தியர்கள் தமிழ் மாவட்டங்களில் இருந்து வெளியேறி வருகின் றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் அனைவரும் இன்று திங்கட் கிழமை கொழும்பில் ஒன்றுகூடி தமது பாது காப்புத் தொடர்பில் கலந்துரையாடவுள் ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-2)

## திருக்கோவிலில் பொதுமகன்சுட்டுக் கொலை

மட்டக்களப்பு, நவ.24

திருக்கோவில் பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு, இனந்தெரியாத ஆயுததாரிகளால் பொதுமகன் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை-

ஆலையடி வேம்புப் பகுதியில் துப் பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் காணப் பட்ட இரண்டு சடலங்களைப் பொலிஸார் மீட்டுள் ளனர். இவை இரண்டும் புலிகளுடையவை யாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தே கம் வெளியிட்டுள்ளனர். (அ-2)

## தென்மராட்சியில் கடமையாற்றும் வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம், நவ.24

தென்மராட்சி வலயத்திற்குட்பட்ட வெளி மாவட்ட ஆசிரியர்களை இன்றும், நாளையும் வலயத்திற்கு வருகைதந்து சம்பளப்பட்டி யலில் கையெழுத்திடுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தெரிவித்துள் ளார்.

வருகைதரும்போது பாடசாலை அதி பரின் உறுதிப்படுத்தலுடன், வரவுச் சான்றி தழையும் கொண்டு வருதல் வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். (203)

# ராசி பலன்

24-11-2008 முதல் 30-11-2008 வரை

பொ.சந்திரலிங்கம்

### மேஷம்



**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்புத் தாமதமாகலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. மன அமைதி இருக்காது.

### இடபம்



**கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2**

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர்உதவிசெய்வர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு தாமதமா கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய் வீகநாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர் பார்ப்புகள் நிறைவேறா. மனஅமைதி இருக்கும்.

### மிதுனம்



**மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை,புனர்பூசம் 1, 2, 3**

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நல முண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீ டுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலோங் கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மனஅமைதி இருக்கும்.

### கடகம்



**புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாம தமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறை யலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா.

### சிம்மம்



**மகம், பூரம், உத்தரம் 1**

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவி னர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை, வீடு, வாக னம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீ டுகள் அமைய லாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறைய லாம். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.

### கன்னி



**உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2**

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்புப் பாதிக்கலாம். பணம் இருக் கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புத் தாமதமாகலாம். புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ் டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில் துறையில் முன்னேற் றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

### துலாம்



**சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.**

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நில வும். உறவினர் அயலவர் பகை கொள்ளக் கூடும். தாய் நலம். தந்தை நல மில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர் வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக் காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர் பார்ப்புகள் நிறைவேறும். மனஅமைதி இருக்காது.

### விருச்சிகம்



**விசாகம் 4, அனுசம், கேட்டை**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்புப் பாதிக்கலாம். பணம் இருக் கும். உறவினர், அயலவர் பகைகொள்ளக் கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமை யலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலோங்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மனஅமைதி இருக்காது.

### தனுசு



**மூலம், பூராடம், உத்தராடம் 1.**

காரியத்தடை இருக்கும். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாக னம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமணவாய்ப்பு தாமத மாகலாம். முதலீடுகளால் லாபம் அதி கரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மனஅமைதி இருக்காது.

### மகரம்



**உத்தராடம் 2 ,3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2**

காரியசித்தியுண்டு. பணப் பற்றாக் குறை நிலவும். உறவினர், அய லவர் விலகியிருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமை யலாம். மாண வர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர் பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மனஅமைதி இருக்காது.

### கும்பம்



**அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3**

காரியசித்தியுண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அய லவர் பகைகொள்ளக்கூடும்.பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டார். உடல் நல முண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு, அதிர்ஷ்டம் உண்டு. தெய் வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்பு கள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மனஅமைதி இருக்கும்.

### மீனம்



**பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நில வும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக் காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. எதிர்பார்ப்பு கள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்

இன்று (24.11.2008) திங்கட்கிழமை தொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் நடைபெறும் இலங்கை உய
பட்டம் பெறும் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பழைய மாணவர் சங்க அங்கத்துவ மாணவர்களையு



செ.செல்வரதன் | இ.தயாபரன் | ப.உதயசங்கர் | ப.கஜேந்திரன் | ந.ரமணன் | க.சுரேஸ்நேசன் | ச.பிங்கலன் | இ.கோகுலன் | ப.விஜயகுமார் | அ.செல்வகுமார்



சி.சிவகௌரி | ப.தேனுகா | ப.தாரகா | கு.ரஜந்தி | செ.தேன்மொழி | சு.துசாந்தி | வ.சாருமதி | இ.பிரசாந்தி | எஸ்.கமலலோஜினி | அ.ஜெயதர்சினி



செபஸ்ரியம்பிள்ளை டெனோசன் புஸ்பகரன் | கு.சுகந்தன் | இ.மகிந்தன் | கே.கோகுலானந்தன் | பா.சீராளன் | இ.வித்தியானந்தன் | ஆ.தர்சீகரன் | கு.லோகப்பிரசன்னா | சி.கமல்ராஜ் | அ.பாலகுமார்



தி.மோகனராஜா | பா.அருள்குமரன் | வி.செந்தூரன் | அ.நிர்மல்ராஜ் | வ.குகேந்திரன் | ப.சுரேஸ்குமார் | தே.சிவானந்தன் | பாக்கியநாதர் டோன் பொஸ்கேப | க.சயரூபன் | இ.வாமனன்



சி.ரஜனிகா | சி.குகதர்சினி | ம.நிருபா | ச.கிருஷ்ணவேணி | சி.மயூரதி | பொ.றஜிதா | அ.செபமேரியூக்ஸிற் | பு.பிரதீபா | அ.ஏஞ்சலா | எ.அபிராமி



பி.சியாமி | செ.ஜீவமலர் | சி.மதுராம்பிகை | நா.வாசுகி | சி.பவதாரணி | க.சுகிர்தா | ம.விஜிதா | இ.தவாணி | சி.மைதிலி | சி.தமிழினி



ஜெ.தர்மிலி | அ.கலைமகள் | இ.சிவமதி | ச.திவ்யா | ஆ.பிரவீனா | சி.பிரபாநந்தினி | ச.பிரியதர்சினி | சி.விஜிதா | கு.பிரகாஜினி | வா.வாசுகிதேவி



பொ.தயாளினி | சு.காந்திமதி | இ.ஸ்ரீவாணி | இ.சிறிதரன் | சி.சிறிறங்கன் | ஏ.சிவகணேசன் | ச.குமுதன் | சி.ஷயந்தன் | செ.செல்வகிரீசன் | ந.ரூபஜெகன்



க.கவீந்திரா | ஞா.ஆர்த்திகா | இ.கயல்விழி | சி.சிவ[illegible] | கு.[illegible] | ம.[illegible] | வை.ஜனார்த்தனி | அ.வேணுசா | சு.சிறிகாந் | இ.சிவஜோதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த்துகின்றோம்

டயர் தொழில்நுட்பவியல் நிறுவன 5ஆவது பட்டமளிப்பு வைபவத்தில் H NDA, HNDM, HNDBS, HNDE
யும்,பட்டம் பெறும் ஏனைய மாணவர்களையும் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று உயர வாழ்த்துகின்றோம்.



இ.தனலோஜன் | யோ.நிமலன் | கி.செல்வரூபன் | ப.வரதராஜன் | ச.துளசிதாசன் | செ.பாலரூபினி | சி.கார்த்திகா | பா.சுகந்தி | அ.ஆன்சோபனா | த.சுகந்தினி



ஜெ.தமிழ்அழகன் | கு.இரவிசங்கர் | சி.ஸ்ரீதர் | சோ.அகிலன் | கே.ஆதித்தன் | ச.சிவரூபன் | செ.ஜெயரூபன் | ப.சுரேந்திரன் | பா.காண்டீபன் | பற்றிக் துரைராஜா றோய் டனிஸ்ரன்



க.திஸாகரன் | யே.கோன்சிலேடியஸ் | விக்டர் இம்மானுவேல் கயில்ரன் | ஏ.சதீஸ்குமார் | சி.ஜெனகன் | அலோசியஸ் கொன்சாக்கா ஒகஸ்தீன் | வ.வரதாபரன் | சீ.சிறிபிரகாஸ் | சு.லோகதாஸ் | ச.சபேசன்



சி.நவநீதன் | ச.மயூரன் | க.சிவகரன் | இ.ரவிக்குமார் | ச.சோபிதன் | அந்தோனிப்பிள்ளை லேகோட் தினேஸ்குமார் | செ.பிரதீபன் | பூ.சசிந்திரா | ந.யசோதா | ந.பிரியதர்ஷனி



இ.பிரதீபா | ச.கார்த்திகா | இ.சாந்தினி | தி.புஸ்பலதா | மு.சுபத்திரா | சி.தர்சினி | ப.அமிர்தா | அ.ஜயதா | த.கமலாதேவி | க.சசிகலா



மு.ஜெகநந்தினி | க.வினோதிக்கா | இ.கல்யாணி | மு.துர்க்கா | ஆ.தர்மினி | பா.தாரணி | சி.சுபானந்தி | சி.கஜந்தி | கு.ரிஸ்ஷாணி | த.டயானி



பே.ஜெயதர்சினி டொறினா | த.தர்ஜினி | த.கார்த்திகா | நா.சண்முகப்பிரியா | கொ.வதனநிறஞ்சனி | யு.துஸ்யந்தி | ம.நிரஞ்சன் | நா.சசிதரன் | ஆ.யசோதினி | க.மதனா



சி.சுகிதன் | சி.பிரியதர்ஷினி | நீ.கலிஸ்ரா | ர.நிறோஜினி | ப.பிரதீபா | நோ.லோபனா | ஞா.செல்வகரன் | தி.பிரதீபா | மு.கஜேந்திரராஜா | ம.சிவச்சந்திரன்



கே.மனோகரி | த.நாககுபதினி | ச.இராஜலக்சுமி

இல.655/2, பீச் வீதி,
யாழ்ப்பாணம்.

**பழைய மாணவர் சங்கம்**
யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம்.

**OLD STUDENTS' ASSOCIATION**
**ADVANCED TECHNOLOGICAL INSTITUTE,**
*NO.665/2, BEACH ROAD, JAFFNA.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) இன்று 24.11.2008 இல் நடைபெறும் பட்டமளிப்பு வைபவத்தில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) இல் பட்டம் பெறும்

## சாந்தினி இலட்சமணன்

அவர்களை மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் சிறப்புடன் உயர அன்புடன் வாழ்த்துகின்றோம்.

**அம்மா, அப்பா, அக்கா, நண்பர்கள்.**

வண்ணை.வடமேற்கு, ஆனைக்கோட்டை.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று கொழும்பு, பண்டாரநாயக்க சர்வதேச.



இ.பாலகுமார்
H.N.D.A.

மண்டபத்தில் இடம்பெறுகின்ற இலங்கை உயர் தொழில் நுட்பவியல் நிறுவன 5 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம்



ரி.சிறிரங்கன் (B.Com)
H.N.D.M.

பெறுவதையிட்டு இவர்களை வாழ்த்துவதோடு, இவர்கள் மேலும் பல பட்டங்களைப் பெற்று வாழ்க்கையில் சிறப்புற வாழ சீரணி நாகபூசணி அம்பாளை வேண்டுகின்றோம்.

அ.க.இராசரத்தினம் குடும்பம்,
சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.

ஆர்.எஸ்.பிரின்டேர்ஸ்,
சீரணிச் சந்தி,
சண்டிலிப்பாய்.
(80709)

அ.கேதீஸ்வரன் குடும்பம்,
ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

# அரசாங்க அறிவித்தல்

## யாழ்.மாவட்டச் செயலகம்,

### சகல பிரதேச செயலகங்கள் / உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் என்பவற்றிற்கான

**வழங்குநர்களையும், ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் - 2009**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும், சேவைகளையும் மாவட்டச் செயலகத்திற்கும், சகல பிரதேச செயலகத்திற்கும் / உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளுக்கும் வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் மாவட்டச் செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் 01-12-2008 தொடக்கம் 15-12-2008 வரை அலுவலக நாள்களில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 2.00 மணி வரையும் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்கல்கள்/சேவைகள் பதிவு செய்தல் - 2009'' எனக் குறிப்பிட்டு, ''அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்'' என்னும் முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ 26.12.2008இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்ப வேண்டும்.

**வழங்கல்கள்**

01. காகிதாதிகள், எழுது பொருள்கள் மற்றும் உபகரணங்கள்
02. அலுவலகத் தளபாடம் (மரம்/உருக்கு)
03. கணனிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள்/போட்டோ கொப்பி இயந்திரங்கள்/தொலைநகல்கள்/தட்டச்சு இயந்திரங்கள் என்பவற்றுடன் தொடர்புடைய ஏனைய அலுவலக தளபாடங்கள்.
04. சகல வகையான காட்வெயார் பொருள்கள்
05. பெயிண்டுகள், வாணிஸ்
06. இயந்திரக்கருவிகளும், உதிரிப்பாகங்களும்
07. ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைகள்
08. மின்சார சாதனங்களும், உதிரிப்பாகங்களும்
09. கட்டடப் பொருள்கள்
10. தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பங்கள், மொப்பர்
11. கார்பிக், விம், பினோல், சவர்க்காரம், மார்பிள் அசிட், Air Fresher
12. டயர், ரியூப்புகள், பற்றரிகள்
13. நீர் இறைக்கும் மோட்டார், உதிரிப்பாகங்கள், துணை உறுப்புகள்
14. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள், துணை உறுப்புக்கள், பற்றரிகள்
15. கணனி பிறின்ரர், போட்டோகொப்பி இயந்திரங்கள் என்பனவற்றின் ரோனர்கள், றிபன்கள்
16. பைப்புகள், பைப் இணைப்புக்கள், அவற்றுடன் தொடர்புடையவை
17. பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ் உற்பத்திகள்
18. பால்மா வகைகள்
19. தொலைபேசிகளும், அவற்றுடன் தொடர்புடையவைகளும்
20. எயார்கொண்டிசனர்கள்

**சேவைகள்/திருத்தங்கள்**

01. அச்சிடுதல், றப்பர் ஸ்டாம்புகள், திகதி ஸ்டாம்புகள்
02. அலுவலக இயந்திரங்கள், மற்றும் சாதனங்கள் திருத்த வேலைகள், பராமரிப்புகளும் (கணனிகள், கல்குலேட்டர்கள்/றோணியோ இயந்திரங்கள்/போட்டோகொப்பி இயந்திரங்கள்/தொலைநகல்கள்/தட்டச்சு இயந்திரங்கள் போன்றவை)
03. குளிர்சாதனப் பெட்டிகள், எயார் கொண்டிசனர்கள் திருத்த வேலைகள்
04. உருக்குத் தளபாட திருத்த வேலைகள்
05. மரத்தளபாடத் திருத்த வேலைகள்
06. கதிரைகள் பின்னுதல்
07. பெயர்ப்பலகைகள் வரைதலும், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகள் செய்தலும்
08. மோட்டார் வாகனங்கள் திருத்த வேலை/சுத்திகரிப்பு வேலைகள், பற்றரி திருத்த வேலைகள்
09. உள்ளகத் தொலைபேசி பராமரிப்புக்கள்
10. கட்டடங்கள், கட்டட சேவைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடையவை
11. மின் மோட்டர்கள், நீர்இறைக்கும் இயந்திரங்கள்,மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல்
12. மின்சார வயறிங் வேலைகள்
13. நீர் வழங்கும் குழாய்கள் பொருத்துதல், திருத்துதல்

**பதிவு தொடர்பானவை**

மாவட்டச் செயலகத்தில் பொருள்கள், சேவைகள் தொடர்பாக பதிவுகளை மேற்கொண்டவர்களிடம் இருந்தே 2009ஆம் ஆண்டிற்கான பொருள்கள், சேவைகளுக்கான கூறுவிலைகள் பெறப்படும் என்பதால் மாவட்டச் செயலகங்களுக்கோ, பிரதேச செயலகங்களுக்கோ, உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளுக்கோ, மாவட்டச் செயலகத்துடன் இணைந்த திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கோ பொருள்கள் சேவைகள் வழங்க விருப்பமுடையவர்கள் மாவட்டச் செயலகத்தில் விண்ணப்பத்தினைப் பெற்று பதிவுகள் செய்யலாம்.

ஒவ்வொரு பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் தத்தம் பிரிவில் உள்ள வழங்குநர்கள்/ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்வதனை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**க.கணேஷ்,**
மாவட்டச் செயலரும், அரசாங்க அதிபரும்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

## வல்வெட்டியில் கண்காட்சி

அறவழிப் போராட்டக் குழுவின்வல்வெட்டி தொழில் பயிலகத்தில் அலுமினியம் பொருத்துதல், தையல் ஆகிய பயிற்சிகள்பெற்ற பயிலுநர்களால் தயாரிக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சி கடந்த வியாழக்கிழமை பயிலகத்தில் இடம்பெற்றது.

அறவழி நிலையத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெற்ற இக் கண்காட்சியை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் திறந்து வைத்தார்.

நெல்லிடி மக்கள் வங்கி முகாமையாளர் பீ.கிருஷ்ணானந்தன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

(202- 207)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி k.ஜெயதர்ஷினி

H.N.D.A [English Medium] 2003\2006

இன்று 24.11.2008 கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் 2006 ஆம் ஆண்டுக்கூரன பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டம் பெறும்

திருமதி ஜெயதர்ஷினி கிருஷ்சாந்தன் அவர்களை வாழ்த்துவதுடன் இவர் வாழ்க்கையில் பல பட்டங்களைப் பெற்றுப் பார்போற்றும் வகையில் இல்லற வாழ்வு நலம்பெற மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்: மாமா, மாமி
திரு.அ.சதானந்தன் (அதிபர்) - (இணுவில் மத்திய கல்லூரி).
திருமதி ச.தேவராணி.

## 2008 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து

## யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயத்தில் வரலாற்றுச் சாதனை படைத்த மாணவர்கள்.



செல்வன் மு.கோகுலன்
150 புள்ளிகள்



செல்வன் தி.கிரிபரன்
146 புள்ளிகள்



செல்வன் லோ.சிவலக்சன்
140 புள்ளிகள்



செல்வன் சி.லதுபரன்
140 புள்ளிகள்



செல்வி உ.நிசோபா
137 புள்ளிகள்



செல்வி இ.தர்சிகா
135 புள்ளிகள்



செல்வி மா.மாதங்கி
133 புள்ளிகள்



செல்வன் இ.தயாளந்
132 புள்ளிகள்



செல்வன் கி.மோகனபிரசாத்
128 புள்ளிகள்



செல்வி சா.சௌமியா
126 புள்ளிகள்



செல்வன் அ.பவித்திரன்
121 புள்ளிகள்



செல்வன் தே.விதுசன்
120 புள்ளிகள்



செல்வன் வி.கஜலக்சன்
119 புள்ளிகள்



செல்வன் ம.சாயிசங்கர்
118 புள்ளிகள்

செல்வன் இ.யோகதீபன் 127 புள்ளிகள்

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 15 மாணவர்களையும் பாராட்டிக் கௌரவிப்பதோடு அவர்களின் சித்திக்காக உழைத்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரையும் மனமுவந்து பாராட்டுகின்றோம். பிள்ளைகளின் சித்திக்காக ஊக்கத்துடன் செயற்பட்ட பெற்றோரையும் பாராட்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
யா/ஆனைப்பந்தி
மெ.மி.வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைநகரில் குழந்தைகள் தினவிழா

யாழ்ப்பாணம், நவ.24

காரைநகர் பிரதேச பாலர் பாடசாலைகள் இணைந்து நடத்தும் குழந்தைகள் தினவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

காரைநகர் பிரதேச முன்பள்ளிகளின் ஒருங்கிணைப்பாளர் செல்வி சுமதி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் காரைநகர் அபிவிருத்திச்சபைத் தலைவரும் யாழ்றரன் கல்லூரி அதிபருமான ந.பரமசிவம் பிரதம விருந்தினராகவும்,

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவரும் காரைநகர் பிரதேச சபைப் பொறுப்பதிகாரியுமான சு.சிவஞானம், காரைநகர் உதவி அரச அதிபர் த.ஜெயசீலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

இவ்விழாவில் முன்பள்ளிக் குழந்தைகளின் செம்பு நடனம், குழு நடனம், காவடி, கரகம், கண்ணன் நடனம், மயில் நடனம் என்பன இடம்பெற உள்ளன. முன்பள்ளிகளுக்கிடையே மாதாந்தம் நடத்தப்பட்ட போட்டிகளில் தெரிவான மாணவர்களுக்கு வாரிவளவு நல்லிணக்கசபை செயலாளராக இருந்து அமரத்துவமடைந்த பட்டு மாமா ஞாபகார்த்தப் பரிசில்களும் வழங்கப்பட்ட உள்ளன. (202-250)

## வீதி சேதம்

வலி.வடக்கு, நவ.24

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் முன்னாலுள்ள வீதியில் தேங்கும் வெள்ளத்தால் மாணவர்கள், பொது மக்கள் பல் வேறு சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

பாடசாலையின் முன்னால் உள்ள வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதனால் மழை பெய்யும் நேரத்தில் வெள்ளம் அதிகம் தேங்கி போக்குவரத்துச் செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது.

வீதியால் வரும் வாகனங்கள் நீர் தேங்கி நிற்கும் கிடங்குகளில் செல்லும் போது நீர் தெறித்து மாணவர்களின் சீருடைகள் அழுக்காவதும், பொதுமக்களும் இத்தகைய நிலைக்கு உள்ளாகுவதும் பெரும் பரிதாபகரமான நிலையாகக் காணப்படுகிறது.

இந்த வீதியில் காணப்படும் குன்று குழிகளை உரிய திணைக்களம் நிரப்பி பாடசாலை மாணவர்களினதும், பொது மக்களினதும் அவலத்தை போக்க உடன் நடவடிக்கையெடுக்க வேண்டியது அத்தியவசியமாகும். (202-86)

## பெற்றோர் தின விழா

வலி.வடக்கு, நவ.24

உடுவில் மகளிர் கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவர்களின் பெற்றோர் தினத்தையொட்டிய நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் திருமதி ஷிராணி மில்ஸ் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

இந் நிகழ்வில் முன்பள்ளி மாணவர்கள் உட்பட தரம் ஒன்று முதல் ஐந்து வரையான மாணவர்களின் பாடல்கள், நடனம், நாடகம் மற்றும் கும்மியாட்டம், கோலாட்டம், காவடி ஆட்டம் என்பனவும் இடம்பெறவுள்ளன. (202-86)

## சண்டிலிப்பாய் பிரதேசத்தில் மையக் கிராமங்கள் தெரிவு

நவாலி, நவ.24

மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஜே/156 முள்ளானை,ஜே/154 மாரிசன் கூடல் உயரப்புலம் கிராம சேவையாளர் பிரிவுகள் மையக் கிராமங்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தற்போது பிரதேச பங்கேற்பிலான கிராமத்தின் மதிப்பீடு, பங்கேற்பு தேவை இனங்காணல் ஆகியன சம்மந்தமான அறிக்கை தாயாரித்தல் என்பன நடைபெற்று வருகின்றன எனப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (202-100)

## மெய்வல்லுநர் பயிற்றுவிப்பாளர் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

வலி.வடக்கு, நவ.24

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தினால் பயிற்றுவிப்பாளர்களுக்கான (மட்டம் ஒன்று) பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நாளை செவ்வாய்க்கிழமை விண்ணப்ப முடிவு திகதியாகும்.

யாழ்.மாவட்டத்தில் இருந்து இப் பயிற்சிநெறியில் கலந்து கொள்ள விரும்பும் விண்ணப்பதாரிகள் இன்று திங்கட்கிழமைக்கு முன்னர் யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற் முன்பாகவுள்ள ரிக்கோ விடுதியில் யாழ்.மாவட்ட மெய்வல்லுனர் சங்கத்தின் பொருளாளர் சுதேஸ்குமாரிடம் விண்ணப்பங்களை ஒப்படைக்கும்படி யாழ்.மாவட்ட மெய்வல்லுனர் சங்கம் அறிவித்துள்ளது. (202-86)

# யாழ்.மாவட்டத்தின் சில பிரதேசங்களில் குழந்தைகளுக்கான பால் விநியோகம் நிறுத்தம்

யாழ்ப்பாணம், நவ.24

யாழ்.மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட போசாக்கு மட்டம் குறைந்த மாணவர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வந்த பால் விநியோகம் சில பிரதேச உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள எட்டு பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் போசாக்கு குறைந்த பிள்ளைகளுக்கு பால் வழங்கும் திட்டம் சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு அலுவலர் களினால் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

கடந்தவாரம் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்ட உதவி ஆணையாளர் குழந்தைகளுக்கான பால் விநியோகத்தை உடனடியாக நிறுத்தும்படி அறிவித்துள்ளதைத் தொடர்ந்து நல்லூர் பிரதேச செயலகம் உட்பட சில பிரதேச செயலகங்கள் நிறுத்தியுள்ளன.

ஏனைய பிரதேச செயலங்களும் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக அறியப்படுகிறது.

ஏற்கனவே தென்னிலங்கையில் இத் திட்டம் செயற்படுத்தப்பட்டு இரண்டு மாதங்கள் பிந்தியே குடாநாட்டில் முன்னெடுக்கப்பட்டது. இந் நிலையில் தற்போது ஏற்பட்ட இந்த நெருக்கடியால் குறிப்பிட்ட திட்டத்துக்கான பணத்தில் ஒரு பகுதி திரும்பிச் செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (202-68)




ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தினரால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட 2007 ஆம் ஆண்டின் கடைசிக் காலாண்டுக்கான விற்பனை மேம்படுத்தும் போட்டியில் தெரிவு செய்யப் பட்டவர்களுக்கு ''பஜாஜ்' மோட்டார் சைக்கிள் பரிசாக வழங்கப்பட்டது. இந்தப் போட்டியில் யாழ். மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட விற்பனை ஆலோசகர் கு.ஜினோசனுக்கு மோட்டார் சைக்கிளின் திறப்பை நெல்லியடிக் கிளையின் முகாமையாளர் க.செல்வராஜன் உத்தியோகபூர்வமாக கையளிப்பதை படத்தில் காணலாம். யாழ் மாவட்டத்தில் இருந்து ஒருவர் மட்டும் தெரிவு செய்யப்பட்டமை தெரிந்ததே.

## காரைநகர் பிரதேசத்தில் மயிர்கொட்டிகள் பெருக்கம்

யாழ்ப்பாணம், நவ.24

காரைநகர் பிரதான வீதிகளில் உள்ள மரங்களில் மயிர்கொட்டிகள் பெருகிக் காணப்படுவதால் இந்த வீதிகள் ஊடாகச் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

இங்குள்ள பிரதான வீதிகளின் இருமருங்கிலும் அடர்ந்து வளர்ந்துள்ள பூவரசு மரங்களில் பெருகி உள்ள மயிர்கொட்டிகள் காலை வேளைகளில் கீழே இறங்குவதனால் அவ்வீதிகள் ஊடாகச் செல்லும் பாடசாலை மாணவர்கள், அரச அலுவலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பெரும் அசௌரியங்களை எதிர்நோக்குகின்றனர். மயிர்கொட்டிகளின் தாக்கத்துக்கு உட்பட்டு மாணவர்கள், அரச அலுவலர்கள், பாடசாலைகளுக்கோ அலுவலகங்களுக்கோ செல்லமுடியாது வீடு திரும்புவது சில நாள்களாக இடம்பெறுகின்றது.

பிரதான வீதிகளில் அடர்ந்து வளர்ந்துள்ள பூவரசு மரங்களின் கிளைகளை அகற்றி பாடசாலை மாணவர்கள், பொதுமக்களின் இடையூறு அற்ற போக்குவரத்துக்கு சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (202-250)

## கோப்பாய் பிரதேசத்தில் கோழித் திருட்டு அதிகரிப்பு

கோப்பாய், நவ.24

கோப்பாய் பிரதேசத்தில் கோழி திருடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பட்டப்பகல் வேளையில் திருடர்கள் மிகவும் சாதுரியமாக வீதிகளில் இரைதேடும் கோழிகளை துரத்திப் பிடித்துக் கொண்டு மறைத்து விடுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இதனால் கோழிகளை வெளியே உணவு தேட அனுப்புவதைத் தவிர்த்து வருவதாகவும் தெரிவித்தனர். (202-72)

# தமிழர்களிடையே தொல்லியாளர்கள் இல்லாததால் எமது வரலாற்றுச் சான்றுகளை இழக்கின்றோம்

## யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் கவலை

நல்லூர், நவ.24

இலங்கை பன்முக சமுதாயப்பண்பாட்டைக் கட்டிக்காத்த பூமி. யார் முதலில் இருந்தவர்கள்? பிற்பட்டவர்கள் யார்? என்ற கருத்து மோதல்கள் தற்சமயம் இடம்பெறுவதை நீங்கள் காண்கிறீர்கள்.

தமிழர்களிடையே தொல்லியலாளர்கள் இல்லாதது ஒரு குறையாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொடங்கிய பின்னரும் கூட தொல்லியலாளர்களாக எம்மவர்கள் விரும்புவது குறைவாக உள்ளது. அதன் காரணமாகத்தான் நாங்கள் இன்று எத்தனையோ எமது வரலாற்றுச் சான்றுகளை இழந்தவர்களாகியுள்ளோம்.

நாங்கள் பக்குவமடையாதபோது எமது சான்றுகள் பல கடத்திச் செல்லப்பட்டு லண்டன் வரை கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இவ்வாறு கவலை வெளியிடுகின்றார் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தலைவர் பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா.

சண்டிலிப்பாய் பிரதேச கலாசாரப் பேரவை 'யாழ்ப்பாணத் தகவல் களஞ்சியம்' என்னும் மென்பொருள் இறுவட்டை வெளியிட்டு வைத்துள்ளது.

அந்த இறுவட்டின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய பேராசிரியர் கிருஷ்ணராசா மேலும் தெரிவித்தவை வருமாறு:

எமது வரலாற்றுச் சான்றுகளை ஆவணப்படுத்துவதன் மூலம் இன்று வெளிநாடுகளில் வாழும் எமது சந்ததியினர் எமது வரலாற்றை அறிந்து கொள்வர். இந்தப் பின்னணியில்தான் இந்த இறுவட்டை வெளியிட வேண்டிய தேவை ஏற்பட்டது. மறைந்து கிடக்கும் அநேக சான்றுகளை வெளிக்கொணர்ந்து யாழ்ப்பாணத்தினரதும் எமது மக்களதும் பூர்வீகத்தை வெளியுலகுக்கு எடுத்துக் காட்ட இதுபோன்ற ஆவணங்களை வெளிக்கொணர எல்லோரதும் ஒத்துழைப்பும் அவசியமாகும் - என்றார்.

இந்நிகழ்வில் அரசாங்க அதிபர் கணேஷ் பேசும்போது கூறியவை வருமாறு:

எமது பிரதேசத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் ஊடாக எமது கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதற்கான கலாசாரப் பேரவைகளின் பங்களிப்பு முக்கியத்துவம்மிக்கது. கலைகளைக் கட்டிக்காப்பதிலும் இளந் தலைமுறைகளிடையே அறிமுகப்படுத்துவதிலும் கலைஞர்களைக் கௌரவிப்பதிலும் பாடசாலை மட்டத்தில் அவற்றைப் பேணுவதிலும் கல்விப்புலத்துடன் இணைந்து செயற்படுகின்றோம்.

எமது பண்டைய வரலாறுகள் வெளிக்கொணரப்பட்டு அனைத்து மக்களும் அதுகுறித்த தெளிவுமிக்கவர்களாக வேண்டும் என்பதற்காக எமது பழைய வரலாற்றுச் சான்றுகளை ஆவணப்படுத்த வேண்டியது முக்கியமாகும். யாழ்ப்பாணத்தின் பெருமையை வெளிப்படுத்த அது தேவையாகும்.

கலை பண்பாட்டுக்காக எவ்வாறு செயற்பட்டோமோ அதேபோன்று வரலாற்றுச் சான்றுகள் குறித்த விடயங்கள் சம்பந்தப்பட்டவர்களையும் கௌரவப்படுத்தக்கூடியதாகப் பிரதேச செயலகங்களின் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட வேண்டும் - என்றார்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ஆறுதிருமுருகன், யாழ்.பல்கலைக்கழக விலங்கியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி சி.குகநாதன், பௌதீகவியல்துறை சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி செ.கந்தசாமி சட்டத்துறைத் தலைவர் வி.பி.சிவநாதன் ஆகியோரும் பேசினர். (202-111)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# தீவக வலயப் பாடசாலைகளில் விசேட கல்வி அலகுகள் திறப்பு

தீவக வலயக் கல்வி அலுவலகத்தினால் தீவகப் பாடசாலைகளில் விசேட கல்வி அலகுகள் திறந்து வைக்கப்படுகின்றன.

இன்று திங்கட்கிழமை அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தில் விசேட கல்வி அலகு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.புவனேந்திரனால் திறந்துவைக்கப்படும்.

எதிர்வரும் வியாழக்கிழமை நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளர், க.அரசரத்தினத்தால் விசேட கல்வி அலகு திறந்துவைக்கப்படும்.

இவ்வகையில் காரைநகரில் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயத்திலும், வேலணையில் வேலணை மேற்கு நடராசா வித்தியாலயத்திலும், நாரந்தனை றோ.க.வித்தியாலயத்திலும் விசேட கல்வி அலகுகள் திறந்துவைக்கப்பட்டுள்ளன.

தீவக வலயப் பிரதேசத்தில் உள்ள பெற்றோர் தமது விசேட தேவையுடைய பிள்ளைகளை அயலிலுள்ள இப்பாடசாலைகளில் இணைத்து கல்வி கற்பிக்க முடியும் என தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் த.ப.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். (202-267)



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.கல்வியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் மங்கல விளக்கேற்றுகின்றார். அருகில் கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன், பிரதி அதிபர் இ.ஆனந்த நடராசா ஆகியோர் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டியாளர்களின் சதிகளை முறியடித்து சத்தியம் வென்றுள்ளது!

**Edna®**

கிறீமி சொக்லட்

எட்னா சொக்லட் சிலோன் லிமிட்டெட் கடந்த சில வாரங்களில் ஒரு சங்கடமான நிலைமைக்கும் சவால்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியிருந்தது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

இப்போது, கொழும்பு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கும் சுகாதார அமைச்சு வழங்கிய சான்றிதழுக்கும் அமைய, இலங்கையில் எட்னா சொக்லேட்கள் மட்டுமே மெலமைன் அற்ற சொக்லேட்கள் என்பது திட்டவட்டமாக நிருபிக்கப்பட்டுள்ளது. 4 நாடுகளிலுள்ள சர்வதேச அங்கீகாரம் பெற்ற 5 ஆய்வுகூடங்களில் நடத்தப்பட்ட 45 விஞ்ஞான பரிசோதனைகளின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

எட்னாவை இலங்கையின் 1ஆம் தரமான சொக்லட் என்ற நிலையிலிருந்து வீழ்த்துவதற்கு எமது போட்டியாளர் மேற்கொண்ட சதிகளும் பாவனையாளர்களைத் தவறான வழியில் இட்டுச்செல்லும் முயற்சிகளும் படு தோல்வி அடைந்துள்ளன. பொய்களைத் தோற்கடித்து உண்மை வெற்றிகொண்ட ஒரு வரலாற்று நிகழ்வு இதுவாகும்.

இந்த இக்கட்டான காலப்பகுதியிலும் எட்னா மீது நம்பிக்கை வைத்து எம்மோடு இணைந்திருந்த எமது அபிமானத்திற்குரிய பாவனையாளர்களுக்கும் வியாபாரிகளுக்கும் எமது நன்றி உரித்தாகுக. இக்காலப்பகுதியில் நீங்கள் எதிர்நோக்கிய அசௌகரியங்களுக்கு வருந்துகிறோம்.

இலங்கையர் விரும்பிச் சுவைக்கும் எட்னா சொக்லட்களில் மனித உடலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய எதுவுமே கிடையாதென பொறுப்பு வாய்ந்த ஒரு கம்பனி என்ற வகையில் நாம் உத்தரவாதம் அளிக்கிறோம்.

முன்னரைப் போலவே, எதிர்காலத்திலும் நீங்கள் எட்னா சொக்லட்களை எவ்வித சந்தேகமோ பயமோ இல்லாமல் ஆசைதீரச் சுவைக்கலாம்.

சதிகளை முறியடித்துச் சத்தியம் வென்ற இந்த வரலாற்று நிகழ்வினை பாவனையாளர்களும் வியாபாரப் பெருமக்களுமான நீங்கள் ஆவலுடன் காத்திருந்தீர்கள் என்பதை நாம் அறிவோம்.

உங்களுக்கு மீண்டும் நன்றி. இது உங்களுக்குக் கிடைத்த வெற்றி!

மெலமைன் அற்றதென நிருபிக்கப்பட்டுள்ளது




WILD ELEPHANT

**Edna** மகிழ்ச்சிப் புன்னகையைப் பரப்பும் சுவை நிறைந்த சொக்லட்


## இணுவிலில் மீள் எழுச்சித்திட்டம்

யாழ்ப்பாணம், நவ.24

''நியாப்'' நிறுவனத்தின் பங்களிப்புடனான கிராம மீள் எழுச்சித்திட்ட முன்மொழிவுக்கான ஒருநாள் செயலமர்வு உரும்பிராய் வடக்கு சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் உரும்பிராய் வடக்கு கிராம சேவகர், நியாப் திட்ட இணைப்பாளர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், நியாப் திட்ட பதில் சமூக இணைப்பாளர், பனை அபிவிருத்திச்சபை அதிகாரி, சுற்றுச்சூழல் அபிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர், விவசாயப் போதனாசிரியர் உட்பட 200இற்கும் அதிகமான பொது மக்களும் கலந்துகொண்டனர்.

தொழில் முயற்சிகளை ஆரம்பித்தல், வீதிகள் அமைத்தல், மின் இணைப்புக்களை பெற்றுக்கொள்ளல், சுய தொழில் முயற்சிகளுக்கு கடன்வழங்கல், தொழிற் பயிற்சிகளை வழங்குவது போன்ற திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் செயற்படுத்துவது என அனைத்துப் பயனாளிகளினாலும் ஏகமனதாக முன்மொழியப்பட்டது. (1)

## கசிப்பு வைத்திருந்தவருக்கு ரூபா 15 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், நவ.24

கசிப்பு வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் ரூபா 15 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினர் மட்டுவில் கிழக்குப் பகுதியில் நடத்திய திடீர் பரிசோதனையின் போது கசிப்பு வைத்திருந்த நபரைக் கண்டுபிடித்து சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்த வழக்கினை விசாரித்த நீதிவான் 15 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் அபராதத் தொகை செலுத்தத் தவறின் எட்டு மாதங்கள் சாதாரண சிறை அனுபவிக்க வேண்டுமெனவும் உத்தரவிட்டார். (1-207)

## செஞ்சிலுவை தெல்லிப்பழை கிளைக்கு இடைக்கால நிர்வாகம் நியமனம்

வலி.வடக்கு, நவ.24

இலங்கை செஞ்சிலுவைச் சங்க தெல்லிப்பழை பிரிவுக்கு இடைக்கால நிர்வாகம் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரம் தெல்லிப்பழைப் பிரிவுக்கான பொதுக்கூட்டம் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும் உரிய அங்கத்தவர்கள் சமுகமளிக்காமையால் கூட்டம் கோரமின்மையால் நடைபெறவில்லை.

மீள் குடியேற்றப் பகுதி என்ற அடிப்படையில் ஏற்கனவே இருந்த நிர்வாகக் குழுவினர் தொடர்ந்து செயற்பட முடியாதெனக் கூறியதையும் கருத்தில் கொண்ட உறுப்பினர்களும் யாழ். மாவட்ட செஞ்சிலுவைச் சங்க தலைவரும் புதிய இடைக்கால நிர்வாகத்தை நியமனம் செய்துள்ளனர்.

தலைவராக சு.பரமநாதனும், செயலாளராக நா.நவரத்தினராசாவும் நியமனம் செய்யப்பட்டதுடன் மற்றும் 3 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் நியமனம் செய்யப்பட்டுள்ளது. (202-86)

## மரண அறிவித்தல்

### காசிநாதர் சின்னத்தம்பி (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்)

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காசிநாதர் சின்னத்தம்பி (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்) 22.11.2008 அன்று காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் மனோரஞ்சிதம்(கொழும்பு), ஜெயக்குமார்(ரவி), வசந்தன்(ஹொலண்ட்), வாசுகி (ஹொலண்ட்), உதயகுமார்(ஹொலண்ட்), மதி(புத்தளம்), ஜெயந்தி (நுணாவில்), காலஞ்சென்ற சுபாசினி ஆகியோரின் தந்தையும் கனகசிங்கம்(கொழும்பு), கலா(கொழும்பு), மனோன்மணி (ஹொலண்ட்), தேவராஜா(ஹொலண்ட்), சாந்தி (ஹொலண்ட்), ரவீந்திரகுமார் (நுணாவில்), றகுமான்(சவூதி) ஆகியோரின் மாமனும் சுகிர்தா, விஜிதா, விஜயகாந், சம்சுதன், கீர்த்திகா, சிந்து, ஜனகன், பருசிகா, நுகா, கீர்த்திகா, நுஸ்க்கி, நதியா, கிரிசாத், அஜித், சிந்துஜன், யசோக், நிவேதிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2008) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் நுணாவில் காந்தாளம் பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நுணாவில் மேற்கு,*
*சாவகச்சேரி.* (80126)

தகவல்:
கனகசிங்கம்(மருமகன்).

## வலி.கிழக்குப் பிரதேச சபை, புத்தூர்
## மீள் கேள்வி அறிவித்தல் - 2009

இப் பத்திரிகையில் 07.11.2008 ஆம் திகதி பிரசுரமான விளம்பரத்தில் வழங்கப்படாத சந்தைகள், இறைச்சிக்கடைகளினை 2009 ஆம் ஆண்டுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:
**01.12.2008 முற்பகல் 10 மணிவரை**

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :
**01.12.2008 பி.ப. 1 மணிவரை**

கேள்விப்பத்திரம் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :
**01.12.2008 பி.ப. 2 மணி**

*(கேள்விப்பத்திரம் திறந்து பரிசீலிக்கும் போது கேள்விப்பத்திரதாரரும் சமுகமளிக்கலாம்)*

மேலதிக விபரங்களையும், கேள்விப் படிவங்களையும் உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வலி.கிழக்குப் பிரதேச சபை
புத்தூர்.
20.11.2008 (ச/555720)

தம்பையா நடராசா
செயலாளர்.

## மரண அறிவித்தல்

### நமசிவாயம் ஏரம்பமூர்த்தி
(இளைப்பாறிய அதிபர்)

மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் ஏரம்பமூர்த்தி 22.11.2008 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம்- தெய்வானை தம்பதியினரின் அன்பு மகனும், கிருஷ்ணசாமி- இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், வித்தகியின் பாசமிகு தந்தையும் பரமேஸ்வரி, சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவானந்தம், சதாசிவம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.11.2008) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை கிழக்கு.*

தகவல்:
மனைவி,
மகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்திலுள்ள ஈழத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பியனுப்பச் சதி முயற்சி

## தா.பாண்டியன் குற்றச்சாட்டு



வேலூர், நவம்பர் 24

தமிழகத்திலுள்ள நான்கரை லட்சம் ஈழத் தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கைக்கு திருப்பியனுப்ப சதி முயற்சி நடக்கிறது.

இலங்கையில் அமைதி திரும்பி விட்டது என்றும், அகதிகள் தங்குவதற்கான அனுமதிக் காலம் முடிந்து விட்டது என்றும் கூறி கடந்த 3 நாள்களுக்கு முன் மத்திய அரசு ஒவ்வொரு அகதிக்கும் எச்சரிக்கை கடிதம் அனுப்பியுள்ளது.

இந்தக் கடிதம் தமிழில் அனுப்பப்பட்டுள்ளமையால் இது தமிழக அரசுக்குத் தெரியாமல் நடந்திருக்காது.

- இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் தா.பாண்டியன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கையில் உடனடிப் போர் நிறுத்தம் கோரி வேலூர் அண்ணா கலையரங்கம் அருகே வேலூர் தமிழ்ச் சங்கம் சார்பில் அனைத்துக் கட்சிகளும் பங்கேற்ற உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது.

இந்தப் போராட்டத்துக்கு தமிழ்ச்சங்கத் தலைவரும், வி.ஐ.டி.வேந்தருமான ஜி.விஸ்வநாதன் தலைமை தாங்கினார். பொருளாளர் பதுமனார் வரவேற்றார்.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில செயலாளர் தா.பாண்டியன் பேசியவை வருமாறு-

இலங்கையில் இருந்து துரத்தப்பட்ட தமிழர்கள் தமிழகத்தில் அகதிகளாகக் குடியேறி வருகின்றனர். கடந்த 20 ஆண்டுகளில் நான்கரை லட்சம் அகதிகள் குடியேறி உள்ளனர். இவர்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்ப முயற்சி நடக்கிறது.

இலங்கையில் அமைதி திரும்பி விட்டது எனவும், அகதிகள் தங்குவதற்கான அனுமதிக் காலம் முடிந்து விட்டது எனவும் கூறி கடந்த 3 நாள்களுக்கு முன் மத்திய அரசு ஒவ்வொரு அகதிக்கும் எச்சரிக்கை கடிதம் அனுப்பி உள்ளது.

இந்தக் கடிதம் தமிழில் அனுப்பப்பட்டுள்ளதால் இது தமிழக அரசுக்குத் தெரியாமல் நடந்திருக்காது. இந்த உத்தரவை ரத்துச் செய்யக் கோரி பிரதமருக்கும், முதல்வருக்கும் கடிதம் எழுதி உள்ளேன். இங்குள்ள தமிழர்களை இலங்கைக்கு அனுப்பி அவர்களை இராணுவத்தோடு சேர்த்து தமிழர்களுக்கு எதிரான போராட்டத்தை தீவிரப்படுத்த மத்திய அரசு ரகசிய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதைத் தடுக்க உடனடி போர் நிறுத்தத்தை கொண்டு வரவேண்டும். அதன் பிறகு, இலங்கை அரசுடன் நேரடியாக தமிழர்களைப் பேச வைப்பதற்கான நடவடிக்கையை மத்திய அரசு எடுக்க வேண்டும். இதற்காக நாம் ஒருமித்த கருத்தோடு மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் - என்றார்.

**புலிகளை ஏன் தடை செய்யவேண்டும்**

சினிமா இயக்குநர் பாரதிராஜா உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கி வைத்து பேசியவை வருமாறு-

விடுதலைப் புலிகள் தடை செய்யப்பட்ட இயக்கமாக கூட இருக்கட்டும். அதை ஏன் தடை செய்ய வேண்டும். எதற்காகத் தடை செய்ய வேண்டும் என்று நான் கேட்கிறேன். அப்படி கேட்டால் இனத்தின் மீது பற்று இல்லாதவர்களும், விசுவாசம் இல்லாதவர்களையும் உள்ளே தள்ளிவிடுவோம் என மிரட்டுகின்றனர்.

இந்த மண்ணுக்காகவும், தமிழனுக்காகவும் நான் எதையாவது 'செய்ய வேண்டும்' என்று நினைக்கிறேன். அதனால், உள்ளே செல்ல நான் தயாராக இருக்கிறேன்.

இப்போது பெரியார் இருந்திருந்தால் நிலைமையே வேறு விதமாக இருந்திருக்கும். இறையாண்மை என்ற பெயரில் தமிழர்களை இரையாக்கி விடாதீர்கள். அவ்வாறு செய்தால் வரலாற்றில் மிக பெரிய கறை தமிழகத்துக்கு வந்துவிடும். அரசியல் பேதங்களை மறந்துவிட்டு இலங்கையில் உடனடிப் போர் நிறுத்தத்தை கொண்டு வர மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

மாலை 5 மணியளவில் கலைப்புலி எஸ்.தாணு பழச்சாறு கொடுத்து உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

# ஈழத் தமிழருக்காக மறியல் போர் கம்யூ. - ம.தி.மு.க. ஆலோசனை

கடலூர், நவ. 24

நாளை (25ஆம் திகதி) நடைபெற இருக்கும் மறியல் போராட்டம் குறித்து, இந்தியக் கம்யூனிஸ்ட் மற்றும் ம.தி.மு.க. சார்பில் ஆலோசனைக் கூட்டம் கடலூரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடந்தது.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான போரை நிறுத்த வேண்டும், இதற்காக மத்திய அரசு அனைத்து நிர்ப்பந்தங்களையும் இலங்கை அரசு மீது ஏற்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடலூர் மாவட்டத்தில் அனைத்து வட்டாரத் தலைநகரங்களிலும் மத்திய அரசு அலுவலகங்கள் முன் 25ஆம் திகதி (நாளை) மறியல் போராட்டம் நடத்துவது என்று கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தியக் கம்யூனிஸ்ட் அலுவலகத்தில் நடந்த இந்தக் கூட்டத்துக்கு ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் செ.பத்மநாபன் தலைமை தாங்கினார். இந்தியக் கம்யூனிஸ்ட் மாவட்டச் செயலாளர் டி.மணிவாசகம் முன்னிலை வகித்தார்.

# வைகோ அழைப்பு

சென்னை, நவ. 24

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நாளை (25ஆம் திகதி) நடத்தும் மறியல் போராட்டத்தில் ம.தி.மு.கவினர் அதிகளவில் கலந்து கொள்ள வேண்டும்'' - என்று அக் கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ கேட்டுக்கொண்டுள்ளார்.

சனிக்கிழமை அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே இந்தத் தகவலை அவர் தெரிவித்துள்ளார்.

# ஈழத் தமிழருக்கு ஆதரவு-அனுதாபம் தெரிவித்து ரஜனியின் பிறந்தநாளன்று உண்ணாவிரதப் போர்!

## மதுரை ரசிகர் மன்றம் அறிவிப்பு

மதுரை, நவ.24

நடிகர் ரஜனிகாந்தின் வேண்டுகோளை ஏற்கும் வகையில் அவரது பிறந்த நாளான டிசம்பர் 12ஆம் திகதி ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்த மதுரை மாவட்ட ரசிகர் மன்ற நிர்வாகிகள் முடிவு செய்துள்ளனர்.

போரால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு உணவு, மருந்து, உடைகள் உள்ளிட்ட நிவாரண உதவிப் பொருள்களை சேகரித்து அனுப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகிறோம் எனவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.



இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டு வருவதால் அவர்களுக்கு ஆதரவையும் அனுதாபத்தையும் தெரிவிக்கும் வகையில் இந்த ஆண்டு தன்னுடைய பிறந்த நாளை கொண்டாட வேண்டாமென்று நடிகர் ரஜனி தனது ரசிகர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதன்படி அவரது வேண்டுகோளை ஏற்கும் வகையில் அவரது பிறந்த நாளான டிசம்பர் 12ஆம் திகதி இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து உண்ணாவிரதம் இருக்க மதுரை மாவட்ட ரசிகர் மன்ற நிர்வாகிகள் முடிவு செய்துள்ளனர்.

இதுகுறித்து ரஜனி ரசிகர் மன்ற நிர்வாகிகளான ரபீக், பாண்டியன், பால தம்புராஜ், சோலைராஜா ஆகியோர் மதுரையில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு-

ஈழத்தமிழர்கள் போரால் பாதிக்கப் பட்டிருப்பதால் சூப்பர் ஸ்டார் ரஜனி காந்த் இந்த ஆண்டு தன்னுடைய பிறந்தநாளைக் கொண்டாட வேண்டாம் என்று ரசிகர்களை கேட்டுக் கொண்டுள்ளார். அவரது வேண்டு கோளை நாங்கள் முழுவதுமாக ஏற்கிறோம்.

அதனை செயற்படுத்தும் வகையில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து சூப்பர் ஸ்டார் பிறந்த நாளான டிசெம்பர் 12ஆம் திகதி உண்ணாவிரதம் இருக்க மதுரை மாவட்ட ரசிகர்கள் முடிவு செய்துள்ளனர். அத்துடன் போரால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு உணவு, மருந்து, உடைகள் போன்ற நிவாரண உதவிப் பொருள்களைச் சேகரித்து அனுப்பும் நடவடிக்கையிலும் ஈடுபட ரஜனி மன்ற நிர்வாகிகளாகிய நாங்கள் முடிவு செய்துள்ளோம் - என்றனர்.

# புலிகளிடம் பணம் பெற்ற பிரபல நடிகர்: ஆதாரத்தை விரைவில் வெளியிடுவேன்!

## சுப்பிரமணியசுவாமி பேட்டி



சென்னை, நவ.24

விடுதலைப் புலிகளிடம் பணம் பெற்ற பிரபல தமிழ் நடிகரின் பெயரைத் தக்க ஆதாரத்துடன் விரைவில் நிரூபிப்பேன் - என்று ஜனதாக் கட்சி தலைவர் சுப்பிரமணியசுவாமி கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களுக்கு நேற்றுமுன்தினம் பேட்டி அளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்

அவர் மேலும் கூறியவை வருமாறு-

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு சீராக இல்லை. இலங்கைப் பிரச்சினையில் தமிழக அரசு மேற்கொண்ட எந்த முயற்சியும் பலன் அளிக்கவில்லை. விடுதலைப் புலிகளிடம் இருந்து பிரபல தமிழ்த் திரைப்பட நடிகர் ஒருவரும் பணம் பெற்றிருக்கிறார். இதற்கான ஆதாரத்தை திரட்டி வருகிறேன். விரைவில் அதை நான் நிரூபிப்பேன் - என்றார்.

# ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கோரி தமிழகம் முழுவதும் 7 நாள்கள் தொடர் ஆர்ப்பாட்டம்

## வணிகர் சங்கத் தலைவர் அறிவிப்பு

சென்னை, நவ.24

ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு வலியுறுத்தி தமிழகம் முழுவதும் நாளை மறுதினத்திலிருந்து டிசம்பர் மாதம் 2ஆம் திகதி வரை 7 நாள்கள் தொடர் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவுள்ளன.

- இவ்வாறு தமிழக வணிகர் சங்கங்களின் பேரவைத்தலைவர் வெள்ளையன் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

ஈழத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கக்கோரி தமிழகம் முழுவதும் வணிகர் சங்கங்களின் பேரவை சார்பில் வருகின்ற 26ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 2ஆம் திகதி வரை 7 நாள்கள் தொடர் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.



சென்னையில் வருகின்ற 26ஆம் திகதி வி.அப்பாத்துரை தலைமையிலும், 27ஆம் திகதி புதுச்சேரியில் எம்.கே.ராமன் தலைமையிலும், 28ஆம் திகதி நாகப்பட்டினத்தில் எஸ்.சிவசுந்தரம் தலைமையிலும், 29ஆம் திகதி திருச்சியில் பி.ரவிமுத்து ராஜா தலைமையிலும், 30ஆம் திகதி தூத்துக்குடியில் அ.துரைசிங் தலைமையிலும், முதலாம் திகதி வேலூரில் சி.கிருஷ்ணன் தலைமையிலும், 2ஆம் திகதி திருப்பூரில் டி.ஆர்.சந்திரசேகர் தலைமையிலும் நடைபெறுகிறது. இந்த ஆர்ப்பாட்டம் ஒவ்வொரு நாளும் பிற்பகல் 3 மணிக்கு தொடங்கும் - என்றுள்ளது.

# இலங்கைத் தமிழர் அகதி முகாம்களில் தமிழக அமைச்சர்கள் அதிரடி ஆய்வு!

சென்னை, நவ. 24

முதல்வர் கருணாநிதியின் உத்தரவைத் தொடர்ந்து, தமிழகத்தில் இலங்கை அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ள முகாம்களில் மாநில அமைச்சர்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திடீர் ஆய்வு ஒன்றை மேற்கொண்டு, அங்கு தங்கியுள்ளவர்களின் குறைகளைக் கேட்டறிந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்தில் 117 அகதி முகாம்களில் 77 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். முகாம்களில் போதியளவு அடிப்படை வசதிகள் உள்ளனவா என்று அமைச்சர்கள் ஆய்வு நடத்தினர்.

விழுப்புரம் மாவட்டம் கீழ்புத்துப்பட்டு அருகிலுள்ள அகதிகள் முகாமில், உயர் கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி ஆய்வு நடத்தினார்.

அந்த முகாமில் 475 குடும்பங்களைச் சேர்ந்த 1,728 பேருக்கு பழங்கள், ரொட்டி உள்ளிட்ட பொருள்களை வழங்கினார். ''முகாம் அமைந்துள்ள பகுதியில் போதிய மின்சார வசதியில்லை'' என்று அமைச்சரிடம் அங்குள்ள அகதிகள் முறைப்பாடு தெரிவித்தனர். இது குறித்து, ஒரு வாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார் அமைச்சர்.

திருச்சி மாவட்டத்தில் கொட்டப்பட்டு பகுதியில் அமைந்துள்ள அகதிகள் முகாமில், போக்குவரத்துத் துறை அமைச்சர் கே.என். நேரு ஆய்வு நடத்தினார்.

அப்போது, ''குடிநீர், உணவுப் பொருள் உள்ளிட்டவை போதுமான அளவு கிடைக்கின்றன எனக் கூறிய இலங்கைத் தமிழர்கள், கோதுமை கிடைப்பதில்லை. மேலும், சிறந்த கல்வி பெறுவதற்கு தனி வகுப்பு (டியூசன்) எதனை ஏற்படுத்தித் தரவேண்டும்'' போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தினர். இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் கே.என்.நேரு உறுதியளித்தார்.

விருதுநகர் மாவட்டம் குல்லூர்சந்தை, மல்லாங்கிணறு, ஆனைக்குட்டம், மொட்டமலை உள்ளிட்ட 6 இடங்களில் அமைந்துள்ள அகதி முகாம்களில் அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன் ஆய்வு நடத்தினார்.

அப்போது, முகாம்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கவும், மோசமான நிலையில் உள்ள வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகள் கட்டித் கொடுக்கவும் அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவிட்டார். நியாய விலைக் கடைகளில், அத்தியாவசியப் பொருள்கள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 4 இடங்களில் அகதி முகாம்கள் உள்ளன. அதில், பெருமாள்புரம், பழவிளை ஆகிய இடங்களில் அமைந்துள்ள முகாம்களில் சுற்றுலாத்துறை அமைச்சர் என்.சுரேஷ் ராஜன் ஆய்வு நடத்தினார்.

அங்குள்ள 4 முகாம்களில் 430 குடும்பங்களைச் சேர்ந்த 1,581 பேர் தங்கியுள்ளனர். பழவிளையில் உள்ள முகாமில் கழிவு நீர் ஓடை வசதிக்கும், பெருமாள்புரம் முகாமில் குடிதண்ணீர் வசதிக்கும் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது என அமைச்சரிடம் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேபோன்று, அகதி முகாம்கள் அமைந்துள்ள பிற மாவட்டங்களிலும் அமைச்சர்கள் ஆய்வு நடத்தினர்.

கோவை மாவட்டம் அவிநாசியில் உள்ள அகதிகள் முகாமில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் பார்வையிட்டு, அங்குள்ள மக்களுக்கு அரிசி உள்ளிட்ட பொருள்களை வழங்கினார். இதுகுறித்த செய்தி வார இதழில் வெளியானது.

இந்த நிலையில், தமிழகத்திலுள்ள அகதிகள் முகாமில் தங்கியுள்ளவர்களின் குறைகளைக் கேட்டறிய, அமைச்சர்கள் திடீர் ஆய்வு நடத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை இனப்படுகொலையைக் கண்டித்து தூத்துக்குடியில் சனியன்று கண்டனக் கூட்டம்

ஈழமண்ணிலே தமிழர்களைக் கொன்று குவிக்கும் சிங்கள அரசைக் கண்டித்தும் ஆயுதம் வழங்கும் இந்திய மத்திய அரசைக் கண்டித்தும் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு சார்பாக தூத்துக்குடியில் முதலாம் நுழைவு வாயில் அருகே நேற்றுமுன்தினம் (22.11.2008) மாலை 6 மணியளவில் கண்டனப்பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இதில் பழ.நெடுமாறன் சிறப்புரை ஆற்றினார். கொட்டும் மழையிலும் மக்கள் அனைவரும் ஈழ ஆதரவு சொல்மழையினை தமிழுணர்வுடன் கேட்டனர்.

பழ.நெடுமாறன் பேசியவை வருமாறு-

''தமிழீழம் அமைந்தால் அது இந்தியாவிற்குத்தான் பாதுகாப்பு'' என்று சர்வதேச ஆய்வு தகவல்களைத் தெளிவுபட விளக்கிக் கூறி தனது கண்டன உரையினை கொட்டும் மழையை பொருட்படுத்தாமல் சிறப்பாகப் பதிவு செய்தார்.

இந்த நிகழ்வில் மீனவர் விடுதலை இயக்கம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி , புதிய தமிழகம், பெரியார் [illegible] இந்தியப் பொதுவுடைமைக் கட்சி மற்றும் பல அமைப்பினர் கலந்துகொண்டு [illegible] சிறப்பாகப் பதிவு செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அவனியில் 10 * 07 * 1920



அவனடியில் 27 * 11 * 2005

### சின்னத்துரை பொன்னம்மா

திதி: அபரபக்க துவாதசி (24.11.2008)

வாழ்விலே எமக்காக யாவையும் அர்ப்பணித்து
வாழ்வாங்கு வாழவைத்த அன்பு அம்மா!
வருடங்கள் மூன்று ஓடி மறைந்தாலும் - எங்கள்
உயிருள்ளவரை நாங்கள் உங்களை மறவோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

15, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (80089)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## ஓராண்டு நினைவஞ்சலி



### ஆனந்தராசா நிதர்ஷன்

(பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன்)

மலர்வு: 20.04.1994
உதிர்வு: 06.12.2007

திதி:24.11.2008

ஆண்டோன்று சென்றாலும்
ஆறாதடா
உன் நினைவு!

பிரிவால் துயருறும்:
பாசமிகு அப்பா, அம்மா, அக்கா.

புலோலி மேற்கு,
பருத்தித்துறை. (சி/555732)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் அதிபர்
திரு பா.சிவராஜா
அவர்களின் அன்புத் தந்தை

### சின்னத்தம்பி பாலசிங்கம்

(ஓய்வுபெற்ற மருந்துக் கலவையாளர்)

அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/நாயன்மார்கட்டு
மகேஸ்வரி வித்தியாலயம்.

நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம். (80112)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
### நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 23 * 11 * 1942



உதிர்வு 26 * 10 * 2008

### திருமதி சிவபாக்கியம் அன்னலிங்கம்

எமது அன்னையின் மரணச் செய்தியறிந்து ஓடோடி வந்து உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், தொலைபேசி, தந்தி ஊடாக அனுதாபங்களைத் தெரிவித்தோர்க்கும் மற்றும் பல வழிகளில் பல உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று 24.11.2008 திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எமது அன்புத் தாயின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தாவடிச்சந்தி,
கோண்டாவில். (80113)

குடும்பத்தினர்.

## கல்விக் கௌரவிப்பு விழா

மந்திகை, நவ.24

மக்கள் வங்கி வடமராட்சியில் நடத்தும் கல்விக் கௌரவிப்பு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

விழாவிற்கு மக்கள் வங்கியின் வட வலய உதவிப் பொது முகாமையாளர் ரி.கே.ஆனந்தராஜா தலைமை வகிப்பார். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் பிரதம விருந்தினராகவும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா, பிரதேச செயலர்களான எஸ்.சத்தியசீலன், ஆர்.வரதீஸ்வரன், உதவி அரசாங்க அதிபர் எம்.ஸ்ரீஸ்கந்தகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (202-218)

## சமய அறிவுப் போட்டி

யாழ்.மாநகராட்சிமன்ற சைவசமய விவகாரக் குழுவினால் மாணவர்களின் சமய அறிவை வளர்க்கும் வகையில் நடத்தப்பட்டு வரும் சமய அறிவுப் போட்டிப் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிமுதல் பி.ப.ஒரு மணிவரை நடைபெறவுள்ளது.

கடந்த காலங்களில் ஐந்து பிரிவாக நடைபெற்று வந்த மேற்படி பரீட்சை, இம்முறை நான்காம் ஆண்டு முதல் 13ஆம் ஆண்டு வரையான வகுப்புகள் ரீதியாக நடை பெறவுள்ளன.

இதனால் ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு பதக்கம் வீதம் பத்து பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன. முன்னர் 5 பதக்கங்களே வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 220 பாடசாலைகளில் நடைபெறவுள்ள சமய அறிவுப் பரீட்சையில் இம்முறை 15 ஆயிரத்து425 மாணவர்கள் தோற்றவுள்ளனர். (202-111)

## மன்னாரில் தீவிர தேடுதல்

மன்னார், நவ.24

மன்னார் மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் ஊடுருவியிருக்கலாம் என்ற காரணத்தால் மன்னார் நகரப் பகுதியில் நேற்று முன்தினம் திடீர் சோதனை நடவடிக்கை இடம்பெற்றது.

விசேட பொலிஸ் குழுக்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டன.

நகரின் மையப்பகுதி, வைத்தியசாலை வீதி, மன்னார் - தலைமன்னார் வீதி, மன்னார் - பள்ளிமுனைவீதி உள்ளிட்ட பல இடங்களில் பொலிஸார் வாகனப் பரிசோதனைகள் மற்றும் அவற்றிற்கான அனுமதிப்பத்திர பரிசோதனைகளை மேற்கொண்டிருக்கின்றார்கள்.

விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டு இந்த பரிசோதனைகள் இடம்பெற்றிருக்கின்றன. எதிர்வரும் மாவீரர் தினத்தை முன்னிட்டு என்றும் இல்லாதவாறு மன்னார் மாவட்டத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

மன்னார் மாவட்டத்தில் சகல வீதிகள், வணக்கஸ்தலங்கள், வர்த்தக நிலையங்கள், வங்கிகள், ஏனைய பொது இடங்கள் என்பவற்றின் முன்னால் துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் நிறுத்துவதும் படையினராலும், பொலிஸாரினாலும் தடை விதிக்கப்படுவதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்தை தொடர்ச்சியாக எதிர் நோக்குவதோடு தமது கடமைகளை தொடர முடியாத நிலைக்கும் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

நகரின் அனைத்து பகுதிகளிலும் ஆயுதம் தரித்த பொலிஸாரும், படையினரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எதிர்வரும் 27ஆம் திகதி விடுதலைப் புலிகள் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்கவுள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் மன்னார் மாவட்டத்திற்குள் ஊடுருவலாம் என்ற காரணத்தினாலும் ஏதேனும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாம் என்ற சந்தேகத்தினாலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாக தெரிகின்றது. (1)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ.24

மீள் பரிசீலனைக்கு அழைக்கப்பட்டுள்ள பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் பெருமாள் கோயில் முன்பாக நடைபெறும் என பட்டதாரிகள் செயற்குழு தெரிவித்துள்ளது. (202)


## வேலையாள்கள் தேவை

அனைத்து வெதுப்பக வேலைகளும்
தெரிந்த அனுபவமிக்க மின் வெதுப்பியும்
[illegible] தேவை.
[illegible]
கே.கே.எஸ் வீதி, மல்லாகம்.


## ஈராண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 11 * 08 * 1953



இறைவன் அடியில் 18 * 11 * 2006

### அமரர் நடராசா சுதர்சன்
(களஞ்சியப் பொறுப்பாளர் லங்கா சிமேந்து லிமிட்டேட்)

திதி: துவாதசி

ஈராண்டு சென்றாலும்
பக்கத்தில் இருக்கின்றீர்கள்
அதிசயமாக வாழ்வை நீத்தே
ஆண்டவனிடம் சென்றீர்கள்
ஆண்டு பல சென்றாலும்
ஆறாது உங்கள் நினைவு

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு. (80094)

குடும்பத்தினர்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 14 . 06 . 1976



இறப்பு 11 . 10 . 2008

### அமரர் இராசரத்தினம் வசந்தன்

என்னிரண்டு கால்களுமே மண்மீது பதிந்திடாது
எனையே தூக்கியென்றும் உலவிவரும் அப்பாவே!
உங்கள் நெஞ்சில் தூங்கியதே நினைவில் தெரிகிறது.
இன்று நான் ஏங்குகின்ற நிலையும் புரிகிறது
அன்றெனது மேலுமோர் பிறந்த நல் நாளினிலே
அன்போடு முத்தமிட்டது இங்கிதமும் இனிக்கிறதே!
இன்று முகங்களைத் தேடுகிறேன் அப்பாவுங்களை காணலையே
அம்மாவைக் கேட்டழுதேன் அம்மாவும் அழுகின்றா!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
அன்பு மகள்
சுவாதி

களுக்கொம்பான்,
பொலிகண்டி. (சி/555733)

## மரண அறிவித்தல்

### திருமதி மனோன்மணி வேலாயுதபிள்ளை

வேலணை ஐந்தாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி வேலாயுதபிள்ளை (18.11.2008) செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் அமரர்கள் காசிப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் மூத்த மகளும் அமரர்களான தாமோதரம்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும் அமரர் வேலாயுதபிள்ளையின் அன்பு மனைவியும் கமலாதேவி, அமரர் அஞ்சலிதேவி மற்றும் தருமசேகரன், அமரர் உருத்திரசேகரன் மற்றும் வசந்ததேவி, அமரர் நடனசேகரன் ஆகியோரின் அன்புத் தாயும் அருணகிரிநாதன், வீரலக்சுமி, காந்தன், தேவராசா ஆகியோரின் அன்பு மாமியும் தவராசா (ஓய்வுபெற்ற அதிபர்), அமரர் சிவமணி மற்றும் சகுந்தலாதேவி (ஆசிரியை), பத்மநாதன் (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சரஸ்வதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியை), கந்தையா (வர்த்தகர்), அமரசிங்கம் (ஓய்வூதியர்), அனுசியா (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் அஜந்தினி, யோகதணதீபன், நீரஜன், சங்கீதா, நீரஜா, சசிகரன், துவாரகன், பிரியா, வித்தியா, ஹரிகரன், செந்தூரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காயத்திரி, கெவின், அஞ்சலீனா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.11.2008) திங்கட்கிழமை டொரன்ரோ கனடாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே.தருமசேகரன் (மகன்),
கா.தவராசா (ஓய்வுபெற்ற அதிபர், யா/இந்து ஆரம்பப் பாடசாலை),
கா.பத்மநாதன் (கனடா),(சகோதரர்கள்).

டொரன்ரோ
கனடா.
0014164213139 (80111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது போட்டியில் இலங்கை ஒன்பது விக்கெட்டுகளால் அபார வெற்றி!

## 67 ஓட்டங்களுக்குள் சுருண்டது சிம்பாப்வே



சிம்பாப்பே விக்கெட்டை வீழ்த்திய மகிழ்ச்சியில் மஹேலவும் சங்கக்காராவும்

இலங்கை மற்றும் சிம்பாப்வே அணிக ளுக்கு இடையிலான இரண்டாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 9 விக்கெட்டுகளால் அபார வெற்றி யீட்டியது.

நேற்றுமுன்தினம் நடந்த இப்போட்டி யில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி 30 ஓவர்களில் 67 ஓட் டங்களை மட்டுமே பெற்று சகல விக் கெட்டுக்களையும் இழந்தது.

அந்த அணிவீரர் தைபு மட்டுமே 12 ஓட்டங்களைப் பெற்றதுடன் மற்றையவர் களில் எவருமே 10 ஓட்டங்களைத் தாண்ட வில்லை.

டில்ஸ் மிகச்சிறப்பாகப் பந்துவீசினார். 6 ஓவர்கள் பந்துவீசிய அவர் 15 ஓட்டங் களைக் கொடுத்து 4 விக் கெட் டு களை வீழ்த்தினார். மஹ்ரூப் 3 விக்கெட்டுகளை யும் துஷாரா 2 விக்கெட்டுகளையும் குல சேகர ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்.

மிக இலகுவான இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி அதன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான உடவத்தவின் விக்கெட்டை மட்டுமே இழந்து வெற்றி இலக்கை எட்டியது. உபுல் தரங்க 29 ஓட்டங்களை யும் சங்கக்காரா 28 ஓட்டங்களையும் ஆட் டமிழக்காமல் பெற்றுக்கொண்டனர்.

ஆட்ட நாயகனாக இலங்கை அணி வீரர் அஜந்த மென்டிஸ் தெரிவானார். 5 போட்டிகள் கொண்ட தொடரில் நடந்து முடிந்த இரு போட்டிகளிலும் வென்று 2:0 என்ற கணக்கில் இலங்கை அணி முன்னிலை வகிக்கிறது. (த)

## 2012 ஒலிம்பிக்கில் கிரிக்கெட்டை சேர்ப்பதற்கு லண்டனில் பிரசாரம்

லண்டன், நவ.24


2012ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட் டியில் கிரிக்கெட் விளையாட்டையும் இடம்பெறச் செய்ய முயற்சி மேற்கொள் ளப்பட்டு வருகிறது.

20 ஓவர்களைக் கொண்ட போட்டிகள் பிரபலமாகி வருகின்றமையையடுத்து ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட்டை சேர்க்க வேண்டும் என்னும் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் 20 ஓவர்களைக் கொண்ட போட்டிகளை இடம்பெறச் செய் வதற்காக பிரச்சாரத்தை பிரிட்டனில் வசிக் கும் ஆசியர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி லண்டனில் நடைபெறவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (த)

## முதல் டெஸ்டில் நியூஸிலாந்தை வீழ்த்தியது அவுஸ்திரேலியா!




பிரிஸ்பேன், நவ. 24

அவுஸ்திரேலியா - நியூசிலாந்து அணி கள் மோதிய முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேனில் நடந்தது.

அவுஸ்திரேலியா முதல் இன்னிங் ஸில் 214 ஓட்டங்களும், நியூசிலாந்து 156 ஓட்டங்களும் எடுத்தன. அவுஸ்திரேலியா 2 ஆவது இன்னிங்ஸில் 268 ஓட்டங்கள் எடுத்தது. கடிச் சிறப்பாக ஆடி 131 ஓட்டங் கள் எடுத்தார்.

இதனால் நியூசிலாந்துக்கு 327 ஓட் டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. 2 ஆவது இன்னிங்ஸை விளையாடிய நியூ சிலாந்து நேற்றுமுன்தினம் 3 ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 6 விக்கெட் இழப் புக்கு 143 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

நான்காம் நாளான நேற்று தொடர்ந்து ஆடிய நியூசிலாந்து 177 ஓட்டங்களில் சுருண்டது. இதனால் 149 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா அபார வெற்றி பெற்றது. ரெய்லர் அதிகபட்சமாக 75 ஓட்டங்கள் எடுத்தார். அவுஸ்திரேலிய தரப்பில் ஜோன்சன் 39 ஓட்டங்கள் கொடுத்து 5 விக்கெட்டுகளைச் சாய்த்தார். ஸ்டூவர்ட் கிளார்க் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

இந்த வெற்றி மூலம் 2 டெஸ்ட் போட் டிகள் கொண்ட தொடரில் அவுஸ்தி ரேலியா 1 - 0 என்ற கணக்கில் முன்னிலை யில் உள்ளது. 2 ஆவது டெஸ்ட் எதிர்வரும் 28 ஆம் திகதி கான்பராவில் தொடங்குகிறது.

## இந்தியா - இங்கிலாந்து இடையிலான நான்காவது போட்டி மழையால் தடங்கல்

இந்திய - இங்கிலாந்து கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான நான்காவது ஒருநாள் போட்டி நேற்று பெங்களூர் சின் னசாமி மைதானத்தில் நடைபெற்றது.

பகலிரவு ஆட்டமாக நடைபெற்ற இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 14 ஓவர்களில் ஒரு விக் கெட்டை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது, ஆரம்பவீரர்களில் ஒருவரான சச்சின் டெண்டுல்கர் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந் தார். ஷேவாக் 45 ஓட்டங்களுடனும் கம்பீர் 23 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்றுமாலையில் பெய்த மழையி னால் ஆட்டம் தடைப்பட்டது.

## இலங்கை ரக்பி அணி வீரர் படுகாயம்

இலங்கை தேசிய ரக்பி அணியின் வீரர் இம்ரான் பிஸ்தமின் என்பவர் நேற்று முன் தினம் இரவு ஹோட்டல் ஒன்றின் மேல் மாடியிலிருந்து விழுந்து படுகாயமடைந் தார்.

கண்டி விளையாட்டுக்கழகத்தில் இருந்து இவர் தேசிய அணிக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

படுகாயமடைந்த இம்ரான் ஆபத்தான நிலையில் வைத்தியசாலை ஒன்றில் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட் டிருக்கிறார். (த)

## சீன ஹோட்டலில் தீ விபத்து: 8 பேர் பலி; 16 பேர் படுகாயம்

பீஜிங், நவ. 24

வட சீனாவின் சான்சி மாகாணத்திலுள்ள லுயியாங் நகரில், 7 அடுக்கு மாடிகளைக் கொண்ட ஹோட்டல் ஒன்றில் வெள்ளிக் கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் 8 பேர் பலியா யினர். 16 பேர் காயமடைந்தனர். மளமள வென்று பரவிய தீயை தீயணைப்புப் படை யினர் கடுமையாகப் போராடி கட்டுப்பாட் டுக்குள் கொண்டு வந்தனர் என தீயணைப் புப் படையினர் தெரிவித்தனர்.

தீ விபத்துக்கான காரணம் தெரியவில்லை. விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

## கோபி அனான், ஜிம்மி கார்டருக்கு சிம்பாப்வே செல்ல அனுமதி மறுப்பு

நியூயோர்க், நவ. 24

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் கோபி அனான், அமெ ரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்டர் ஆகியோர் சிம்பாப்வே வர அனு மதி மறுக்கப்பட்டுள்ளது. நெல்சன் மண் டேலாவின் மனைவி கிரகா மச்செலுடன் சிம்பாப்வேயின் மனிதாபிமான அவல நிலை குறித்து விசாரிப்பதற்காக அவர்கள் அங்கு செல்ல முயன்றனர். ஆனால், அவர் கள் எதிர்க்கட்சிக்கு ஆதரவாக செயல்பட முயலுகிறார்கள் என சிம்பாப்வே அரசு குற்றம் சாட்டியுள்ளது.

பின்னர் இவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் மார்கன் சாங்கி ராயை தென்னாபிரிக் கத்தலைநகர் ஜோஹன் னஸ்பர்க்கில் சந்தித் துள்ளனர். இவர்களு டைய முயற்சிகளைப் பாராட்டிய சாங்கிராய், சிம்பாப்வே எதி கொள்ளும் பிரச்சினைகளைச் சமா ளிக்க இவர்களோடு கைகோர்த்து தாம் பங்காற்ற விரும்பு கிறார் எனத் தெரிவித்துள்ளார்.

உலக அரங்கில்

## பிரிட்டிஷ் இஸ்லாமிய தீவிரவாதி பாகிஸ்தான் தாக்குதலில் பலி?



இஸ்லாமாபாத், நவ. 24

விமான குண்டுத் தாக்குதல் திட்டம் ஒன றைத் தீட்டினார் எனக் குற்றம் சாட்டப் பட்ட பிரிட்டிஷ் இஸ்லாமிய தீவிரவாதி யான ரஷித் ரஊஃப், பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியில் அமெரிக்காவின் ஏவுகணைத் தாக்குதலில் கொல்லப்பட் டுள்ளார் என பாகிஸ்தான் அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

வடக்கு வசிரிஸ்தான் பகுதியில் தீவிர வாதிகளின் பதுங்கு இடம் மீது நடத்தப் பட்ட ஏவுகணைத் தாக்குதலில் ரஊப்பும் மேலும் நால்வரும் கொல்லப்பட்டுள்ளனர் எனப் பெயர் தெரிவிக்க விரும்பாத பாது காப்பு அதிகாரி தெரிவித்தார்.

இந்தச் செய்தியை பிரிட்டிஷ் அதிகாரி கள் ஆராய்ந்து வருகின்றார்கள். ஆனால், இச் செய்தி எழுதப்படும்வரையில் உறு திப்படுத்தப்படவில்லை.

## பராக் ஒபாமாவிற்கு செல்வந்தர் ஆதரவு



வாஷிங்ரன், நவ. 24

அமெரிக்காவின் செல்வச்செழிக்க செல் வந்தரான ஜோர்ஜ் சோரஸ் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பராக் ஒபாமாவின் பொருளாதார ஊக்குவிப்பு முயற்சிகளை வரவேற்றுள்ளார். பராக் ஒபாமாவின் திறமை, பொருளாதார நிலைகுலைவை சீர்செய்யும் அவரது முயற்சி ஆகியவற்றை தான் பெரிதும் எதிர்பார்க்கிறார் என அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பொருளாதார சிக்கலை நீக்க இன் னும் முப்பதாயிரம் முதல் அறுபதாயிரம் கோடி டொலர் வரை தேவை என ஜோர்ஜ் சோரஸ் கூறியுள்ளார். இதற்கிடையே, பராக் ஒபாமா தனது வாராந்திர வானொலி உரையில், 2011 ஆம் வருடத்தில் சுமார் இருபத்தைந்து லட்சம் வேலைகளை உருவாக்கும் திட்டத்தை தனது அணியினர் தீவிரமாக தயாரித்து வருகின் றனர் எனத் தெரிவித்துள்ளார்.

## பொருளாதார சரிவில் இருந்து மீள உலக நாடுகளுக்குச் சீனா உதவி

லீமா,நவ.24

சர்வதேச அளவில் பொருளாதார நிலைமை மோசமாகவுள்ளது என்று சீன ஜனாதிபதி ஹூ ஜிந்தாவோ தெரிவித்துள் ளார்.

இந்நிலையிலும் சீனாவின் பொருளா தார வளர்ச்சி வலுவாக இருக்கிறது. உலக நாடுகள் பொருளாதார நெருக்கடியிலி ருந்து மீள சீனா உதவும் என்றும் அவர் கூறி யுள்ளார்.

பெரு தலைநகர் லிமாவில் நடைபெறும் ஆசிய - பசுபிக் பொருளாதார மாநாட்டில் கலந்துகொள்ள வந்துள்ள பல்வேறு நாட் டுத் தொழிலதிபர்களி டையே, ஹூஜிந் தாவோ, வெள்ளிக்கிழமை பேசினார்.

தற்போது சர்வதேச அளவில் பொருளா தார நிலைமை மோசமாகவே உள்ளது. இந்த சர்வதேச நெருக்கடி, ஆசிய - பசுபிக் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சீனாவின் பொருளாதார வளர்ச்சி நல்ல நிலையில் உள்ளது. சர்வ தேச பொருளாதார நெருக்கடியைச் சமா ளிக்கும் முயற்சிக்கு சீனா துணையாக இருக்கும். கடந்த ஆண்டு 11 சதவீதமாக இருந்த சீனாவின் பொருளாதார வளர்ச்சி இந்த ஆண்டிறுதியில் சற்று குறைந்து துள் ளது என்றும் அவர் சுட்டிக் காட்டி யுள்ளார்.

பொருளாதார நெருக்கடியால் அமெ ரிக்கா, ஐரோப்பிய நாடுகள், சீனாவிலிருந்து இறக்குமதி செய் வதைக் குறைத்துக் கொண் டுள்ளன. இதுவே, சற்று தொய்வு ஏற்படக் காரணம். எனினும், அந்நியச் செலாவணி கையி ருப்பு திருப்திகரமாக உள்ளது. இது நெருக் கடியைச் சமாளிக்க உதவும், உள்நாட்டில் பொருளாதார நட வடிக்கைகள் சீராக உள்ளன என்றும் அவர் கூறியுள்ளார். (அ-சி)


## பாராட்டி வாழ்த்துகிறோம்

இன்று (24.11.2008) திங்கட்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும் உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் யாழ் மாணவர்களை மேலும் சிறப்புற வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர் "பிரகாந்த்" தொலைத்தொடர்பு நிலையம்.
56 B, பலாலி வீதி, திருநெல்வேலி. (80117)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கில் பணிபுரியும் வைத்தியர்களுக்கு பாதுகாப்பு அளிக்கக் கோருகின்றது ஐ.தே.கட்சி

கொழும்பு, நவ. 24

மட்டக்களப்பில் சிங்கள டாக்டர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டமையைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்டிருக்கும் நிலைமையைச் சமாளிப்பதற்காக வடக்கு - கிழக்கில் பணிபுரியும் அனைத்து வைத்தியர்களதும் பாதுகாப்பை அதிகரிக்குமாறு ஐக்கிய தேசியக்கட்சி அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசிய கட்சியின் எம்.பியான டாக்டர் ஜயலத் ஜயவர்தனவே இவ்வேண்டுகோளை விடுத்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

மட்டக்களப்பில் சிங்கள டாக்டர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டமையைத் தொடர்ந்து அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது.

சிங்கள வைத்தியர்கள் பணியில் இருந்து இப்போது விலகியுள்ளனர். மக்களுக்குச் சிறந்த வைத்திய சேவை வழங்கப்படவேண்டும் என்றால் வைத்தியர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள டாக்டர் அனைவரினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நடவடிக்கை எடுக்கவேண்டும்.

உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா இருந்தும்கூட வடக்கு - கிழக்கில் வைத்தியர்களின் பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்காதமை எமக்குக் கவலையைத் தருகிறது. - என்றார். (அ-சி)

# மண்முனைப் பகுதியில் மீனவர் சுட்டுக்கொலை!

கொழும்பு, நவ. 24

மட்டக்களப்பு, மண்முனைப் பகுதியில் நேற்றுமாலை மீனவர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த சிறிதரன் (வயது-30) என்ற மீனவரே உயிரிழந்தவராவார்.

இவர் தனது தொழிலை முடித்துக் கொண்டு வீடு திரும்பிக்கொண்ட திருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் இவர் மீது துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலம் தற்போது மட்டு. வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மண்முனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (அ-சி)

# வடக்கில் உள்ள படையினருக்கு கொழும்பிலிருந்து ஜாதிக ஹெல உறுமயவின் பொருள்கள்

கொழும்பு, நவ. 24

வன்னியில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள படையினருக்கு வழங்குவதற்காக நேற்றுக் கொழும்பில் இருந்து அத்தியாவசியப் பொருள்கள் ரயில் மூலம் வுவனியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

ஜாதிக ஹெல உறுமய, விமல்வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகளும் சில சிங்கள அமைப்புகளும் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

அதிகமான மக்கள் இதற்கு நிதி உதவிகளையும் பொருள் உதவிகளையும் வழங்கி ஒத்துழைப்பு வழங்கினர் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-சி)

# மட்டக்களப்பில் வைத்தியசாலைகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு ஏற்பாடு

## மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, நவ. 24

மட்டக்களப்பு மாவட்டத்தில் டாக்டர் ஒருவர் கொல்லப்பட்டதை அடுத்து கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து வைத்தியசாலைகளுக்கும் டாக்டர்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களுக்கும் பாதுகாப்பு வழங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அந்த வகையில் வைத்தியசாலைகள் மற்றும் வைத்தியர்களின் வாசஸ்தலங்களுக்கு அருகாமையில் பாதுகாப்புக் காவலரண்கள் அமைக்கப்படவுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார மற்றும் தேசிய வைத்தியத்துறை அமைச்சர் ஏ.எம்.ஐ. ஹிஸ்புல்லா கூறியுள்ளதாக நேற்றுத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையிலும் காவலரண்கள் அமைக்கப் படவுள்ளதாகவும், மாகாணத்திலுள்ள ஏனைய வைத்தியசாலைகளிலும் காவலரண் அமைப்பது குறித்து சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியுடன் தாம் கலந்துரையாடல் மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (அ-ரி)

# விவசாயிகள் தமது தொழிலைச் செய்வதற்கு மட்டக்களப்பில் படையினர் கட்டுப்பாடு!

கொழும்பு, நவ.24

கிழக்கு மாகாணத்தில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு சில பிரதேசங்களில் இன்னமும் பாதுகாப்புத் தரப்பினர் கட்டுப்பாடுகளும் நிபந்தனைகளும் விதிக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணம் முழுமையாக விடுவிக்கப்பட்டதாக அரசு அறிவித்திருந்தாலும், இத்தகைய கட்டுப்பாடுகள் மற்றும் நிபந்தனைகள் காரணமாக தமது சொந்த வயல்களுக்கு சுதந்திரமாகச் சென்று தங்கியிருந்து வேளாண்மைச் செய்கையில் ஈடுபடக் கூடிய சூழ்நிலை இன்னமும் ஏற்படவில்லை என அப்பிரதேச விவசாயிகள் கவலை வெளியிடப்பட்டுள்ளனர்.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டம் மாதுறு ஓயா நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் விவசாயச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளைப் பொறுத்த வரை, பிரதான வீதியிலுள்ள இராணுவ முகாமில் புகைப் படங்களுடன் விபரங்களைப் பதிந்து விசேட அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நடைமுறை பாதுகாப்பு தரப்பினரால் அமுல்படுத்தப்படுகின்றது.

இந்த நடைமுறை காரணமாக அனுமதிப் பத்திரமின்றி வயல் நிலங்களுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என கூறும் அப்பிரதேச விவசாயிகள், வயலில் தங்கியிருப்பது உழவு மற்றும் எரிபொருள்களை எடுத்துச் செல்வது, வேலையாள்களை அழைத்துச் செல்வது தொடர்பாகவும், பாதுகாப்பு தரப்பினரால் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடுகின்றனர்.

## லண்டன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலகம் முழுவதிலும் உள்ள தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டமைப்பில் அங்கம் வக்கின்றனர். நாளைமறுதினம் புதன்கிழமை இந்த மாநாடு நடைபெறவுள்ளது. (அ)

## 2½லட்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கான உபகரணங்கள் பொதியிடப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு மாணவர்கள் கல்வியைத் தொடரும் வகையில் 35 தற்காலிகக் குடில்களை யுனிசெவ் நிறுவனம் ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறப்படுகிறது. (அ-சி)

## பரந்தனைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பினும் இந்த மோதல் தொடர்பில் படைத்தரப்பிலிருந்து இச்செய்தி எழுதப்பட்டபோது எந்தத் தகவல்களும் வெளிவரவில்லை.

நேற்றைய மோதலில் உயிரிழந்த 43 இராணுவத்தினரில், 8 இராணுவத்தினரின் சடலங்கள் தங்களால் கைப்பற்றப்பட்டன என விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். அத்துடன் படையினரின் ஆயுதங்கள் சிலவும் கைப்பற்றப்பட்டன எனவும் புலிகள் குறிப்பிட்டனர்.

இந்த மோதலினால் நேற்று ஆயிரக்கணக்கான மக்கள் பல இடங்களிலிருந்து, தமது உடைமைகளையும் கைவிட்டு, கொட்டும் மழையையும் பாராமல் - பல இன்னல்களுக்கும் மத்தியிலும் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர் என அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

நல்லூர்ப் பகுதி, பூநகரிக்கும் பரந்தனுக்கும் இடையில், குடமுருட்டி ஆறு யாழ். கடல் நீரேரியில் சங்கமிக்கும் பகுதியில் உள்ளது. அந்த ஆறு, மழை வெள்ளத்தால் நிரம்பி வழிந்தோடுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் வரும் 27ஆம் திகதி விடுதலைப் புலிகளின் மாவீரர் தினத்துக்கு முன்னர் கிளிநொச்சியைக் கைப்பற்றும் நோக்கில் இராணுவம் மூர்க்கத்தனமாகத் தாக்குதல் நடத்திவரும் வேளையில், அதனை புலிகள் கடுமையாக எதிர்கொள்கின்றனர் எனவும் களமுனைத் தகவல்கள் தெரிவித்தாக இணையத்தளத்தில் தகவல் வெளியாகியது. (அ-சி)

## கிளிநொச்சியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைத்தரப்பின் அணி ஒன்று முன்னேற்ற நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது என்றும் படைத்தரப்புத் தெரிவித்தது. எனினும் இது தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து நேற்றுமாலை வரை எந்தத் தகவல்களும் வெளியாகியிருக்கவில்லை. (அ-சி)

## சோக கீதம்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்ணா சிலை முன்பு திரண்டனர். பின்னர் அங்கிருந்து ஊர்வலமாக சோகப் பாடல்களை இசைத்தபடி மிஷன் தெரு வரை சென்றனர். இந்த வித்தியாசமான நிகழ்ச்சி புதுச்சேரி மக்களின் கவனத்தை ஈர்ப்பதாக இருந்தது. (அ-சி)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலையகப் பகுதிகளைச் சேர்ந்தோரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.

தமது ஆள் அடையாளத்தை உரியமுறையில் சமர்ப்பிக்கத் தவறியமையாலேயே கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர்கள் பொலிஸ் தடுப்புக்காவலில் தடுத்து வைக்கப்பட்டு அவர்களிடம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது. (அ-சி)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புக் கண்காணிப்பை படைத்தரப்பு முடுக்கிவிட்டிருக்கின்றது.

இதேசமயம், மாவீரர் தினத்தை ஒட்டி யுத்தக் களமுனையிலும் புலிகள் திடீர் அதிரடித் தாக்குதல்களைப் பெரும் எடுப்பில் நடத்த முயலலாம் என எதிர்பார்த்து, படைத்தரப்பு முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, தென்னிலங்கையில் முக்கிய அரசியல் பிரமுகர்கள் மற்றும் தலைவர்களின் பாதுகாப்பும் உஷார் படுத்தப்பட்டிருக்கின்றது.

பல பிரமுகர்களும், அரசியல் தலைவர்களும் மாவீரர் தினக் காலத்தை வெளிநாட்டில் கழிப்பதற்காக வெளிநாடுகளுக்குப் பயணித்து வருகின்றனர் என்றும் கூறப்பட்டது. (அ-சி)

## மாகாண சபைத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்கவே இவ்வாறு தெரிவித்தார்.

### பொதுத் தேர்தலை நடத்த அஞ்சுகிறது அரசு

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

பொதுத் தேர்தலை நடத்தப் போவதாக அரசு அண்மைக்காலமாகக் கூறிவந்தது. ஆனால், திடீரென அத்திட்டத்தை மாற்றி மாகாணசபைத் தேர்தலை நடத்தப்போவதாகக் கூறிவருகிறது.

பொதுத்தேர்தல் மீது அரசு கொண்டிருக்கும் அச்சமே இதற்குக் காரணம். பொதுத் தேர்தலை நடத்துவதற்கு அரசு மிகவும் தயங்குகிறது.

வாழ்க்கைச் செலவின அதிகரிப்பால் கஷ்டப்படும் மக்கள் இந்த அரசை ஆதரிக்க மாட்டார்கள் என்று தெரிந்தமையினாலேயே அரசு பொதுத்தேர்தலை நடத்தப் பயப்படுகிறது.

ஆனால், நாம் எந்தத் தேர்தலையும் எதிர்கொள்ளத் தயாராகவிருக்கிறோம். பல கட்சிகளை எம்முடன் கூட்டமைப்பாக இணைத்துக்கொண்டு தேர்தலில் குதிக்க நாம் தயாராகவிருக்கிறோம்.

இதற்கான பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன. வரப்போகும் தேர்தல் எதுவாக இருந்தாலும் அதை நாம் முழுப் பலத்துடன் எதிர்கொள்வோம்.

ஆனால், தேர்தலுக்கு முன்னர் தேர்தல் ஆணைக்குழு உட்பட அனைத்து ஆணைக்குழுக்களையும் அரசு உடன் அமைக்கவேண்டும்.

அப்போதுதான் நீதியானதும் நியாயமானதுமான தேர்தலை எதிர்பார்க்க முடியும். இல்லாவிடில் அரசு தேர்தல் மோசடியில் ஈடுபட வாய்ப்புண்டு - என்றார். (அ-சி)

## கிழக்கு மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணசபையைப் பொறுப்பேற்றது முதல் இன்றுவரையும் ஒருவருக்குக்கூட தொழில்வாய்ப்பு வழங்க முடியாத நிலையில் தாம் உள்ளார் என்றும் அவர் கூறியுள்ளார்.

நேற்றைய ஆங்கில வாரஇதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே பிள்ளையான் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

13 ஆவது திருத்தச் சட்டத்தின்படி கிழக்கில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டு அச்சபை செயற்பட்டு வருகின்ற போதிலும் கூட, அதற்கு அதிகாரம் எதுவும் வழங்கப்படவில்லை.

13ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் எனக்கு வழங்கப்படவில்லை. கிழக்கின் அபிவிருத்திக்காக 13ஆவது திருத்தச் சட்ட அதிகாரத்தை என்னிடம் உடன் வழங்குமாறு நான் மத்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்து வருகிறேன்.

### இதுவரை ஒருவருக்கேனும் வேலை வாய்ப்பு வழங்கமுடியவில்லை

ஆனால், கருணா இந்த அதிகாரத்தைத் என்னிடம் கொடுக்கவேண்டாம் என்று அரசிடம் கூறிவருகின்றார்.

இதன் காரணமாக நான் இந்த வருடம் மே மாதம் கிழக்கு மாகாணசபையைப் பொறுப்பேற்றதுமுதல் இன்றுவரை ஒருவருக்கேனும் தொழில் வாய்ப்பை வழங்கமுடியவில்லை.

அதேபோல் பொலிஸ் அதிகாரத்தையும் நாம் அரசிடம் கேட்கிறோம். பொலிஸ் அதிகாரம் எம்மிடம் இருந்தால் தான் எமது உறுப்பினர்கள் கொல்லப்படுவதைத் தடுக்க முடியும்.

இப்போது நான் எனது பிரத்தியேக செயலாளர் ரகுவையும் இழந்துள்ளேன். இது எனக்கு மட்டுமன்றி முழுத் தமிழருக்குமே ஒரு பாரிய இழப்பாகும்.

ரகுவை புலிகள் கொலை செய்யவில்லை என்பதை நாம் மீண்டும் மீண்டும் சொல்கிறோம். கிழக்கின் அபிவிருத்தியை விரும்பாதவர்களே இந்தக் கொலைக்குக் காரணம்.

ரகு கொல்லப்படுவதற்கு முதல்நாள் நானும் ர்குவும் அத்துருகிரியவில் இருந்தமை பற்றிய விடயம் எம்முடன் இருந்த ஒருவரைத்தவிர வேறு எவருக்கும் தெரியாது.

என்னிடம் இக்கொலை தொடர்பான ஆதாரங்கள் உள்ளன. நாம் மிக விரைவில் கொலையாளிகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவருவோம். - என்றார். (அ-சி)

NAFISA SPOKEN ENGLISH
Nafisa Spoken English- VCD+ACD
Day by Day Spoken English. Tick- Soft- VCD/DVD/CR- ROM
GO GO'S சிறுவர்களுக்கான Learning English- VCD
பின்வரும் புத்தக நிலையங்களில் பெறலாம்.
பூபாலசிங்கம் - யாழ்., அன்னை - யாழ்., ஆல் சிலோன் - யாழ்.

கற்சுமி
நவம்பர் மாத வெளியீடுகள்
அம்மா
அன்னை
தாய்
அறிவு
தேடல்
வாங்கி

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லி[illegible]யார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org